உ

சிவமயம்

# திருவிசைப்பா
# திருப்பல்லாண்டு

(ஒன்பதாம் திருமுறை)

பஜனைச் சபையாரின்

ஐம்பதாவது ஆண்டு நிறைவு

நினைவாக

பஜனைச் சபை

2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

பஜனைச் சபையாரின் வெளியீட்டுப் பணியில்
ஐம்பதாவது ஆண்டு நிறைவு நினைவாக
வெளியிடப் பெற்றது இந்நூல்

# *திருவிசைப்பா*
# *திருப்பல்லாண்டு*
## [ஒன்பதாம் திருமுறை]

வெளியீடு:
பஜனைச் சபை
சுழிபுரம்.
2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா திருப்பல்லாண்டு

குறிப்பு:-

பன்னிரு திருமுறை முற்றும் ஓதுவோர்கள் வேண்டுதலை நிறைவு செய்யும் நோக்குடன் யாவரும் இலகுவாக படிப்பதற்காக ஸ்ரீ காசிமடம் திருப்பனந்தாள் வெளியீடு 1994ம் ஆண்டு வெளியிடப்பெற்ற நூலிலுள்ள பாடல்கள் ஒப்பு நோக்கப்பட்டுள்ளதை தெரிவித்துக் கொள்கின் றோம்.

**வணக்கம்**

நன்றி:- *ஸ்ரீ காசிமடம் சுவாமிகள்*
*திருப்பனந்தாள் வெளியீடு 1994*

**இங்ஙனம்**
**பஜனைச்சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வெளியீட்டுரை

வணக்கம். நாம் எமது பகுதியில் பன்னிருதிருமுறை முற்றும் ஓதும் நிகழ்வை நடாத்தி இன்புற்று மகிழ்ந்து வந்த நாட்கள் பலவாகும். அவ்வேளை திருவிசைப்பா திருப்பல்லாண்டு நூல் கிடைக்காததால் நாம் அவற்றை தேடி இரவலாகப் பெற்று படித்து வந்ததை மறக்கவில்லை.

பஜனைச் சபையார் சமய புராண படன நூல்கள் சிலவற்றை மீள்பதிப்புச் செய்து இலவசமாகவும் மலிவு விலையிலும் பலர்பெற்று பயன் பெறுவதை யாவரும் அறிவார்கள். இப்பணியை பாராட்டி எம்மை ஊக்குவித்தவர்களுக்கு இவ்வேளை நன்றியைக் கூறிக்கொள்கின்றோம்.

1994ம் ஆண்டு ஸ்ரீ காசிமடம் வெளியீடு செய்த திருவிசைப்பா திருப்பல்லாண்டு நூல் எமதுநூலகத் திற்கு கிடைத்துள்ளது. இந்த நூல் பாடல்களை நம்பியாண்டார் நம்பிகள் தொகுத்திருக்கின்றார். பல அன்பர்கள் வேண்டிய வண்ணம் இந் நூலிலுள்ள பாடல்களை பதிப்பித்து யாவரும் பயன்பெற வழங்கு வதாக முடிவுசெய்தோம். இதன் விளைவு இன்று யாவரது கைகளிலும் பாடல்கள் உள்ளதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

ஒன்பதாம் திருமுறையானது திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்று பெயர்பெறும். இத்திருமுறை யில் 29 பதிகங்கள் இடம் பெற்றுள்ளன. தற்போது 301 பாடல்களே உள்ளது. சில பதிகங்களில் சில பாடல்கள் மறைந்துபோயின. தேவாரப் பதிகங் களைப் போலத் திருவிசைப்பா பதிகங்கட்கும் பண் வகுக்கப் பெற்றிருக்கிறது.

**I.** திருவிசைப்பா.

| | | |
|---|---|---|
| 1. | திருமளிகைத்தேவர் | 4 திருப்பதிகம். |
| 2. | சேந்தனார் | 3 திருப்பதிகம். |
| 3. | கருவூர்த்தேவர் | 10 திருப்பதிகம். |
| 4. | பூந்துருத்திநம்பி காடநம்பி | 2 திருப்பதிகம். |
| 5. | கண்டராதித்தர் | 1 திருப்பதிகம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வேணாட்டடிகள் 1 திருப்பதிகம்.
7. திருவாலிய முதனார் 4 திருப்பதிகம்.
8. புருடோத்தநம்பி 2 திருப்பதிகம்.
9. சேதிராயர் 1 திருப்பதிகம்.

**II.** திருப்பல்லாண்டு.
1. சேந்தனார் 1 திருப்பதிகம்.

ஆகிய பதிகங்களை உடையனவாகும். இவ் வெளியீட்டு நூலிலுள்ள பாடல்களை வெளியிட்ட ஸ்ரீ காசி மடத்தாருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள் கின்றோம். திருமுறை ஓதுவோர் இந்நூலிலுள்ள பாட ல்களைப் பாடி பக்தி கொள்ள ஓர் தூண்டுகோலாக அமைவதே எங்கள் நோக்காகும். செய்யுள்களை இல குவாக தெரிந்துகொள்ள செய்யுள் முதல் குறிப்பகரா தியும் இறுதியாக சேர்க்கப்பட்டுள்ளது.

இந் நூல் வெளியீட்டுக்கு யாவரது பங்களிப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. பஜ னைச் சபையாரின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு நினைவு வெளியீடாக திருவிசைப்பா, திருப்பல் லாண்டு நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந் நூலை பெறவிரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும். ரூபாய் 30,000/= தொகையை நாம் அச்சிட செலவு செய்துள்ளோம் இந்நூல் விலை நிர்ணயம் செய்யப் படவில்லை.

திரு. வெ. அன்பழகன் ஸ்ரீமாரூதி அச்சக முதல்வர் எமது சபை வெளியீடுகளை தமது கைவண்ணத்தில் ஆக்கம் செய்து உதவி வருபவர். இந்த நூலையும் சகாயமாக செய்து உதவியுள்ளதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றோம். எங்கள் அன்பான நன்றியையும் கூறி இன்புறுகின்றோம்.

இந்த நூல் வெளியிட எமக்கு பக்க பலமாகவும் துணை யாகவும் விளங்கி உதவிய அறிஞர்கள் அன்பர்க ளுக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொள் கின்றோம்.

வணக்கம்.

இங்ஙனம்
க. வாமதேவன். **J.P**
கௌரவ செயலாளர்
பஜனைச் சபை.

**30-04-2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. திருமளிகைத் தேவர்

அருளிய

# திருவிசைப்பா

## 1. கோயில் - ஒளிவளர் விளக்கே

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. 1

இடர்கெடுத் தென்னைஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல் விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே. 2

தற்பரம் பொருளே! சசிகண்ட! சிகண்டா!
சாமகண்டா! அண்ட வாணா!
நற்பெரும் பொருளாய்! உரைகலந் துன்னை
என்னுடை நாவினால் நவில்வான்
அற்பனென் னுள்ளத் தளவிலா உன்னைத்
தந்தபொன் னம்பலத் தாடீ!
கற்பமாய் உலகாய் அல்லையா னாயைத்
தொண்டனேன் கருதுமா கருதே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையிற் சிறுமை பெண்ணோடா ணாய்என்
பிறப்பிறப் பறுத்தபே ரொளியே!
கருமையின் வெளியே! கயற்கணாள் இமவான்
மகள்உமை யவள்களை கண்ணே!
அருமையின் மறைநான் கோலமிட் டரற்றும்
அப்பனே! அம்பலத் தமுதே!
ஒருமையிற் பலபுக் குருவிநின் றாயைத்
தொண்டனேன் உரைக்குமா றுரையே. 4

கோலமே! மேலை வானவர் கோவே!
குணங்குறி இறந்ததோர் குணமே!
காலமே! கங்கை நாயகா! எங்கள்
காலகா லா! காம நாசா!
ஆலமே அமுதுண் டம்பலஞ் செம்பொற்
கோயில்கொண் டாடவல் லானே!
ஞாலமே! தமியேன் நற்றவத் தாயைத்
தொண்டனேன் நணுகுமா நணுகே. 5

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா!
அம்பொன் செய் அம்பலத் தரசே!
ஏறணி கொடியெம் மீசனே! உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே. 6

தனதன்நற் றோழா! சங்கரா! சூல
பாணியே! தாணுவே! சிவனே!
கனகநற் றூணே! கற்பகக் கொழுந்தே!
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே!
அனகனே! குமர விநாயக சனக!
அம்பலத் தமரசே கரனே!
உனகழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. கோயில் – ஒளிவளர் விளக்கே

திறம்பிய பிறவிச் சிலதெய்வ நெறிக்கே
திகைக்கின்றேன் றனைத்திகை யாமே
நிறம்பொன்னும் மின்னும் நிறைந்தசே வடிக்கீழ்
நிகழ்வித்த நிகரிலா மணியே!
அறம்பல திறங்கண் டருந்தவர்க் கரசாய்
ஆலின்கீழ் இருந்தஅம் பலவா!
புறஞ்சமண் புத்தர் பொய்கள்கண் டாயைத்
தொண்டனேன் புணருமா புணரே. 8

தக்கன்நற் றலையும் எச்சன்வன் தலையும்
தாமரை நான்முகன் தலையும்
ஒக்கவின டருள ஒண்திருப் புருவம்
நெறித்தரு ளியவுருத் திரனே!
அக்கணி புலித்தோல் ஆடைமேல் ஆட
ஆடப்பொன் னம்பலத் தாடும்
சொக்கனே! எவர்க்குந் தொடர்வரி யாயைத்
தொண்டனேன் தொடருமா தொடரே. 9

மடங்கலாயக் கனகன் மார்புகீண் டானுக்
கருள் புரி வள்ளலே! மருளார்
இடங்கொள்முப் புரம்வெந் தவியவை திகத்தேர்
ஏறிய ஏறுசே வகனே!
அடங்கவல் அரக்கன் அருட்டிரு வரைகீழ்
அடர்த்தபொன் னம்பலத் தரசே!
விடங்கொள்கண் டத்தெம் விடங்கனே! உன்னைத்
தொண்டனேன் விரும்புமா விரும்பே. 10

மறைகளும் அமரர் கூட்டமும் மாட்டா(து)
அயன் திரு மாலொடு மயங்கி
முறைமுறை முறையிட்(டு) ஓர்வரி யாயை
மூர்க்கனேன் மொழிந்தபுன் மொழிகள்
அறைகழல் அரன்சீர் அறிவிலா வெறுமைச்
சிறுமையிற் பொறுக்கும்அம் பலத்துள்
நிறைதரு கருணா நிலயமே! உன்னைத்
தொண்டனேன் நினையுமா நினையே. 11

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கோயில் - உயர்கொடியாடை

பண் - பஞ்சம்

பாதாதி கேசம்

திருச்சிற்றம்பலம்

உயர்கொடி யாடை மிடைபட லத்தின்
    ஓமதூ மப்பட லத்தின்
பெயர்நெடு மாடத்(து) அகிற்புகைப் படலம்
    பெருகிய பெரும்பற்றப் புலியூர்ச்
சியரொளி மணிகள் நிரந்துசேர் கனகம்
    நிறைந்தசிற் றம்பலக் கூத்தா!
மயர்வறும் அமரர் மகுடந்தோய் மலர்ச்சே
    வடிகள்என் மனத்துவைத் தருளே. 1

கருவளர் மேகத் தகடுதோய் மகுடக்
    கனகமா ளிகைகலந் தெங்கும்
பெருவளர் முத்தீ நான்மறைத் தொழில்சால்
    எழில்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவதி நிதியம்
    திரண்டசிற் றம்பலக் கூத்தா!
உருவளர் இன்பச் சிலம்பொலி அலம்பும்
    உன்னடிக் கீழ(து)என் னுயிரே. 2

வரம்பிரி வாளை மிளிர்மடுக் கமலம்
    கரும்பொடு மாந்துமே திகள்சேர்
பரம்பிரி செந்நெற் கழனிச் செங்கழுநீர்ப்
    பழனஞ்சூழ் பெரும்பற்றப் புலியூர்ச்
சிரம்புணர் முடிவா னவர் அடி முறையால்
    இறைஞ்சு சிற்றம்பலக் கூத்தா!
நிரந்தரம் முனிவர் நினைதிருக் கணைக்கால்
    நினைந்துநின்(று) ஒழிந்ததென் நெஞ்சே. 3

தேர்மலி விழவிற் குழலொலி தெருவில்
    கூத்தொலி ஏத்தொலி ஒத்தின்
பேரொலி பரந்து கடலொலி மலியப்
    பொலிதரு பெரும்பற்றப் புலியூர்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ. கோயில் - உயர்கொடியாடை

சீர்நில(வு) இலயத் திருநடத் தியல்பில்
திகழ்ந்தசிற் றம்பலக் கூத்தா!
வார்மலி முலையாள் வருடிய திரள்மா
மணிக்குறங்(கு) அடைந்ததென் மதியே. 4

நிறைதழை வாழை நிழற்கொடி நெடுந்தெங்(கு)
இளங்கமு(கு) உளங்கொள்நீள் பலமாப்
பிறைதவழ் பொழில்சூழ் கிடங்கிடைப் பதணம்
முதுமதிற் பெரும்பற்றப் புலியூர்ச்
சிறைகொள் நீர்த் தரளத் திரள்கொள் நித் திலத்த
செம்பொற்சிற் றம்பலக் கூத்த!
பொறையணி நிதம்பப் புலியதள் ஆடைக்
கச்சுநூல் புகுந்ததென் புகலே. 5

அதுமதி இதுவென்(று) அலந்தலை நூல்கற்(று)
அழைப்பொழிந்(து) அருமறை அறிந்து
பிதுமதி வழிநின்(று) ஒழிவிலா வேள்விப்
பெரியவர் பெரும்பற்றப் புலியூர்ச்
செதுமதிச் சமணும் தேரரும் சேராச்
செல்வச்சிற் றம்பலக் கூத்த!
மதுமதி வெள்ளத் திருவயிற்(று) உந்தி
வளைப்புண்(டு)என் னுள்மகிழ்ந் ததுவே. 6

பொருவரைப் புயத்தின் மீமிசைப் புலித்தோல்
பொடியணி பூணநூல் அகலம்
பெருவரை புரைதிண் தோளுடன் காணப்
பெற்றவர் பெரும்பற்றப் புலியூர்த்
திருமரு(வு) உதரத் தார்திசை மிடைப்ப
நடஞ்செய்சிற் றம்பலக் கூத்த!
உருமரு(வு) உதரத் தனிவடம் தொடர்ந்து
கிடந்த(து)என் உணர்வுணர்ந்(து) உணர்ந்தே. 7

கணியெரி விசிறு கரம்துடி விடவாய்க்
கங்கணம் செங்கைமற் றபயம்
பிணிகெட இவைகண்(டு) அரன்பெரு நடத்திற்
பிரிவிலார் பெரும்பற்றப் புலியூர்த்
திணிமணி நீல கண்டத்(து) என் அமுதே!
சீர்கொள்சிற் றம்பலக் கூத்த!
அணிமணி முறுவற் பவளவாய்ச் செய்ய
சோதியுள் அடங்கிற்(று)என் அறிவே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெடு மால்இந் திரன்அயன் வானோர்
 திருக்கடைக் காவலின் நெருங்கிப்
பெருமுடி மோதி உகுமணி முன்றிற்
 பிறங்கிய பெரும்பற்றப் புலியூர்ச்
செருநெடு மேரு வில்லின்முப் புரம்தீ
 விரித்தசிற் றம்பலக் கூத்த!
கருவடி குழைக்கா(து) அமலச் செங்கமல
 மலர்முகங் கலந்த(து)என் கருத்தே. 9

ஏர்கொள்கற் பகமொத்(து) இருசிலைப் புருவம்
 பெருந்தடங் கண்கள்மூன் றுடையோன்
பேர்கள்ஆயிரம்நூ றாயிரம் பிதற்றும்
 பெற்றியோர் பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்கொள்கொக் கிறகும் கொன்றையும் துன்று
 சென்னிச்சிற் றம்பலக் கூத்த!
நீர்கொள்செஞ் சடைவாழ் மதிபுது மத்தம்
 நிகழ்ந்தஎன் சிந்தையுள் நிறைந்தே. 10

காமனைக் காலன் தக்கன்மிக் கெச்சன்
 படக்கடைக் கணித்தவன் அல்லாப்
பேய்மனம் பிறிந்த தவப்பெருந் தொண்டர்
 தொண்டனேன் பெரும்பற்றப் புலியூர்ச்
சேமநற் றில்லை வட்டங்கொண்(டு) ஆண்
 செல்வச்சிற் றம்பலக் கூத்த!
பூமலர் அடிக்கீழ்ப் புராணபூ தங்கள்
 பொறுப்பர்என் புன்சொலின் பொருளே.
 11

திருச்சிற்றம்பலம்

## 3. கோயில் – உறவாகிய யோகம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

உறவா கியயோ கமும்போ கமுமாய்
 உயிராளி! என்னும்;என் பொன்னொருநாள்
சிறவா தவர்புரஞ் செற்ற கொற்றச்
 சிலைகொண்டு பன்றிப்பின் சென்றுநின்ற
மறவா! என்னும்; மணிநீர் அருவி
 மகேந்திர மாமலைமேல் உறையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. கோயில் – உறவாகிய யோகம்

குறவா! என்னும் குணக்குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 1

காடாடு பல்கணஞ் சூழக் கேழற்
கடும்பின் நெடும்பகற் கான்நடந்த
வேடா! மகேந்திர வெற்பா! என்னும்;
வினையேன் மடந்தைவிம் மாவெருவும்;
சேடா! என்னும்; செல்வர்மூ வாயிரஞ்
செழுஞ்சோதி அந்தணர் செங்கைதொழும்
கோடா! என்னும்; குணக்குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 2

கானே வரு(ம்)முரண் ஏனம் எய்த
களியார் புளினநற்கா ளாய்! என்னும்!
வானே தடவும் நெடுங் குடுமி
மகேந்திர மாமலை மேலிருந்த
தேனே! என்னும்; தெய்வவாய் மொழியார்
திருவாளர்மூ வாயிரவர் தெய்வக்
கோனே! என்னும் குணக்குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 3

வெறியேறு பன்றிப் பின்சென்(று) ஒருநாள்
விசயற்(கு) அருள்செய்த வேந்தே! என்னும்;
மறியேறு சாரல் மகேந்திரமா
மலைமேல் இருந்தமருந் தே! என்னும்;
நெறியே! என்னும்; நெறிநின் றவர்கள்
நினைக்கின்ற நீதி வேதாந்தநிலைக்
குறியே! என்னும்; குணக்குன்றே! என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 4

செழுந்தென்றல் அன்றில்இத் திங்கள் கங்குல்
திரைவீரை தீங்குழல் சேவின்மணி
எழுந்தின்(று) என்மேல் பகையாட வாடும்
எனை நீ நலிவதென் னே? என்னும்;
அழுந்தா மகேந்திரத்(து) அந்தரப்புட்(கு)
அரசுக் கரசே! அமரர்தனிக்
கொழுந்தே! என்னும்; குணக்குன்றே என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டார் குழலுமை நங்கை முன்னே
மகேந்திரச் சாரல் வராகத்தின் பின்
கண்டார் கவல வில்லாடி வேடர்
கடிநா யுடன்கை வளைந்தாய்! என்னும்
பண்டாய மலரயன் தக்கன் எச்சன்
பகலோன் தலைபல் பசுங்கண்
கொண்டாய்! என்னும் குணக்குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 6

கடுப்பாய்ப் பறைகறங்கக் கடுவெஞ் சிலையும்
கணையும் கவணும் கைக்கொண்(டு)
உடுப்பாய் தோல் செருப்புச் சுரிகை
வராக முன்னோடி விளியுளைப்ப
நடப்பாய்! மகேந்திர நாத! நா தாந்தத்(து)
அரையா என்பார்க்கு நாதாந்தபதம்
கொடுப்பாய்! என்னும் குணக்குன்றே! என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 7

சேவேந்து வெல்கொடி யானே! என்னும்
சிவனே! என் சேமத்துணையே! என்னும்
மாவேந்து சாரல் மகேந்திரத்தில்
வளர்நா யகா! இங்கே வாராய் என்னும்
பூவேந்தி மூவா யிரவர் தொழப்
புகழேந்து மன்று பொலியநின்ற
கோவே! என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 8

தரவார் புனம் சுனைதாழ் அருவித்
தடம்கல் லுறையும் மடங்கல்அமர்
மரவார் பொழில்எழில் வேங்கை எங்கும்
மழைசூழ் மகேந்திர மாமலைமேல்
சுரவா! என்னும் சுடர்நீள் முடிமால் அயன்
இந்திரன் முதல்தே வர்க்கெல்லாம்
குரவா! என்னும் குணக்குன்றே! என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 9

திருநீ றிடாவுருத் தீண்டேன் என்னும்
திருநீறு மெய்த்திரு முண்டத்திட்டுப்
பெருநீல கண்டன் திறங்கொண்(டு) இவள்
பிதற்றிப் பெருந்தெரு வேதிரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. கோயில் – உறவாகிய யோகம்

வருநீர் அருவி மகேந்தி ரப்பொன்
மலையின் மலைமக ளுக்கருளுங்
குருநீ என்னும்; குணக்குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 10

உற்றாய்! என்னும்; உன்னை யன்றி மற்றொன்(று)
உணரேன் என்னும்; உணர்வுகள் கலக்கப்
பெற்றாய ஐந்தெ ழுத்தும் பிதற்றிப்
பிணிதீர வெண்ணீறிடப் பெற்றேன் என்னும்;
கற்றாய சோதி மகேந்தி ரம்சூழ
மனத்திருள் வாங்கிச் சூழாதநெஞ்சிற்
குற்றாய்! என்னும்; குணக்குன்றே! என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 11

வேறாக உள்ளத்(து) உவகை விளைத்(து)
அவனிச் சிவலோக வேதவென்றி
மாறாத மூவாயிர வரையும் எனையும்
மகிழ்ந்தாள வல்லாய்! என்னும்;
ஆறார் சிகர மகேந்தி ரத்(து)உன்
அடியார் பிழைபொறுப் பாய்!மாதோர்
கூறாய்! என்னும்; குணக்குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 12

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. கோயில் - இணங்கிலாவீசன்

பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

இணங்கிலா ஈசன் நேசத்(து)
இருந்தசித் தத்தி னேற்கு
மணங்கொள் சீர்த் தில்லை வாணன்
மணவடி யார்கள் வண்மைக்
குணங்களைக் கூறா வீறில்
கோறைவாய்ப் பீறற் பிண்டப்
பிணங்களைக் காணா கண்வாய்
பேசா(து) அப் பேய்க ளோடே. 1

எட்டுரு விரவி என்னை
ஆண்டவன் ஈண்டு சோதி
விட்டிலங்(கு) அலங்கல் தில்லை
வேந்தனைச் சேர்ந்தி லாத
துட்டரைத் தூர்த்த வார்த்தைத்
தொழும்பரைப் பிழம்பு பேசும்
பிட்டரைக் காணா கண்வாய்
பேசா(து) அப் பேய்க ளோடே. 2

அருட்டிரள் செம்பொற் சோதி
அம்பலத் தாடு கின்ற
இருட்டிரள் கண்டத் தெம்மான்
இன்பருக்(கு) அன்பு செய்யா
அரட்டரை அரட்டுப் பேசும்
அழுக்கரைக் கழுக்க ளாய
பிரட்டரைக் காணா கண்வாய்
பேசா(து)அப் பேய்க ளோடே. 3

துணுக்கென அயனும் மாலும்
தொடர்வருஞ் சுடராய் இப்பால்
அணுக்கருக்(கு) அணிய செம்பொன்
அம்பலத் தாடிக்(கு) அல்லாச்
சிணுக்கரைச் செத்தற் கொத்தைச்
சிதம்பரைச் சீத்தை ஊத்தைப்
பிணுக்கரைக் காணா கண்வாய்
பேசா(து)அப் பேய்க ளோடே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. கோயில் – இணங்கிலாவீசன்

திசைச்குமிக் குலவு சீர்த்தித்
    தில்லைக்கூத்(து) உகந்து தீய
நசிக்கவெண் ணீற(து) ஆடும்
    நமர்களை நணுகா நாய்கள்
அசிக்க ஆரியங்கள் ஓதும்
    ஆதரைப் பேத வாதப்
பிசுக்கரைக் காணா கண்வாய்
    பேசா(து)அப் பேய்க ளோடே. 5

ஆடர வாட ஆடும்
    அம்பலத்(து) அமிர்தே! என்னும்
சேடர்சே வடிகள் சூடத்
    திருவிலா உருவி னாரைச்
சாடரைச் சாட்கை மோடச்
    சழக்கரைப் பிழக்கப் பிட்கப்
பேடரைக் காணா கண்வாய்
    பேசா(து)அப் பேய்களோடே. 6

உருக்கிஎன் உள்ளத் துள்ளே
    ஊறலந் தேறல் மாறாத்
திருக்குறிப்(பு) அருளும் தில்லைச்
    செல்வன்பாற் செல்லும் செல்வில்
அருக்கரை அள்ளல் வாய
    கள்ளரை அவியாப் பாவப்
பெருக்கரைக் காணா கண்வாய்
    பேசா(து)அப் பேய்களோடே. 7

செக்கர்ஒத்(து) இரவி நூறா
    யிரத்திரள் ஒப்பாம் தில்லைச்
சொக்கர் அம்பலவர் என்னும்
    சுருதியைக் கருத மாட்டா
எக்கரைக் குண்ட மிண்ட
    எத்தரைப் புத்த ராதிப்
பொக்கரைக் காணா கண்வாய்
    பேசா(து)அப் பேய்களோடே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சனைத் தலையைக் கொண்டு
செண்டடித்(து) இடபம் ஏறி
அச்சங்கொண்(டு) அமரர் ஓட
நின்றஅம் பலவற்(கு) அல்லாக்
கச்சரைக் கல்லாப் பொல்லாக்
கயவரைப் பசுநூல் கற்கும்
பிச்சரைக் காணா கண்வாய்
பேசா(து)அப் பேய்க ளோடே. 9

வீண்ணவர் மகுட கோடி
மிடைந்தொளிர் மணிகள் வீசும்
அண்ணல்அம் பலவன் கொற்ற
அரசனுக்(கு) ஆசை இல்லாத்
தெண்ணரைத் தெருளா உள்ளத்(து)
இருளரைத் திட்டை முட்டைப்
பெண்ணரைக் காணா கண்வாய்
பேசா(து)அப் பேய்க ளோடே. 10

சிறப்புடை யடியார் தில்லைச்
செம்பொன் அம் பலவற்(கு) ஆளாம்
உறைப்புடை யடியார் கீழ்க்கீழ்
உறைப்பர்சே வடிநீ(று) ஆடார்
இறப்பொடு பிறப்பி னுக்கே
இனியராய் மீண்டும் மீண்டும்
பிறப்பரைக் காணா கண்வாய்
பேசா(து)அப் பேய்க ளோடே. 11

தீருச்சிற்றம்பலம்.

**திருமளிகைத் தேவர் அருளிய திருவிசைப்பா முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 2. சேந்தனார்

அருளிய

# திருவிசைப்பா

## 1. திருவீழிமிழலை

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஏகநா யகனை இமையவர்க்(கு) அரசை
என்னுயிர்க்(கு) அமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற்(கு) அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே. 1

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே. 2

மண்டலத் தொளியை விலக்கியான் நுகர்ந்த
மருந்தைஎன் மாறிலா மணியைப்
பண்டலர் அயன்மாற்(கு) அரிதுமாய் அடியார்க்(கு)
எளியதோர் பவளமால் வரையை
விண்டலர் மலர்வாய் வேரிவார் பொழில்சூழ்
திருவீழி மிழலையூ ராளும்
கொண்டலங் கண்டத்(து) எம்குரு மணியைக்
குறுகவல் வினைகுறு காவே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னடி நிழற்கீழ் என்னையும் தகைத்த
சசிகுலா மவுலியைத் தானே
என்னிடைக் கமலம் மூன்றினுள் தோன்றி
எழுஞ்செழுஞ் சுடரினை அருள்சேர்
மின்னெடுங் கடலுள் வெள்ளத்தை வீழி
மிழலையுள் விளங்குவெண் பளிங்கின்
பொன்னடிக்(கு) அடிமை புக்கினிப் போக
விடுவனோ பூண்டுகொண் டேனே. 4

இத்தெய்வ நெறிநன் றென்(று) இருள்மாயப்
பிறப்பறா இந்திர சாலப்
பொய்த்தெய்வ நெறிநான் புகாவகை புரிந்த
புராணசிந் தாமணி வைத்த
மெய்த்தெய்வ நெறிநான் மறையவர் வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
அத்தெய்வ நெறியிற் சிவமலா(து) அவமும்
அறிவரோ அறிவுடை யோரே. 5

அக்கனா அனைய செல்வமே சந்தித்(து)
ஐவரோ(டு) அழுந்தியான் அவமே
புக்கிடா வண்ணம் காத்தெனை ஆண்ட
புனிதனை வனிதைபா கனைஎண்
திக்கெலாங் குலவும் புகழ்த்திரு வீழி
மிழலையான் திருவடி நிழற்கீழ்ப்
புக்குநிற் பவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந்(து) அடிமைபூண் டேனே. 6

கங்கைநீர் அரிசிற் கரையிரு மருங்கும்
கமழ்பொழில் தழுவிய கழனித்
திங்கள்நேர் தீண்ட நீண்டமா ளிகைசூழ்
மாடநீ டுயர்திரு வீழித்
தங்குசீர்ச் செல்வத் தெய்வத்தான் தோன்றி
நம்பியைத் தன்பெருஞ் சோதி
மங்கையோர் பாகத்(து) என்னரு மருந்தை
வருந்திநான் மறப்பனோ? இனியே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. திருவீழிமிழலை

ஆயிரங் கமலம் ஞாயி(று)ஆ யிரம்மூக்
கண்முக கரசர ணத்தோன்
பாயிருங் கங்கை பனிநிலாக் கரந்த
படர்சடை மின்னுபொன் முடியோன்
வேயிருந் தோளி உமைமண வாளன்
விரும்பிய மிழலைசூழ் பொழிலைப்
போயிருந் தேயும் போற்றுவார் கழல்கள்
போற்றுவார் புரந்தரா திகளே. 8

எண்ணில்பல் கோடி சேவடி; முடிகள்
எண்ணில்பல் கோடி; திண் டோள்கள்
எண்ணில்பல் கோடி; திருவுரு நாமம்
ஏர்கொள்முக் கண்முகம் இயல்பும்
எண்ணில்பல் கோடி; எல்லைக்(கு)அப் பாலாய்
நின்(று)ஐஞ்நூற்(று) அந்தணர் ஏத்தும்
எண்ணில்பல் கோடி குணத்தர்ஏர் வீழி
இவர்நம்மை ஆளுடை யாரே. 9

தக்கன்வெங் கதிரோன் சலந்தரன் பிரமன்
சந்திரன் இந்திரன் எச்சன்
மிக்கநெஞ்(சு) அரக்கன் புரம்கரி கருடன்
மறலிவேள் இவர்மிகை செகுத்தோன்
திக்கெலாம் நிறைந்த புகழ்த்திரு வீழி
மிழலையான் திருவடி நிழழ்கீழ்ப்
புக்கிருந் தவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந்(து) அடிமைபூண் டேனே. 10

உளங்கொள மதுரக் கதிர்விரித்(து) உயிர்மேல்
அருள்சொரி தரும்உமா பதியை
வளங்கிளர் நதியும் மதியமும் சூடி
மழவிடை மேல்வரு வானை
விளங்கொளி வீழி மிழலைவேந் தேயென்(று)
ஆந்தனைச் சேந்தன்தா தையையான்
களங்கொள அழைத்தால் பிழைக்குமோ அடியேன்
கைக்கொண்ட கனககற் பகமே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. திருவாவடுதுறை

பாடலங் காரப் பரிசில்கா(சு) அருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத்(து) எம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்துநின் றானை
வேடலங் காரக் கோலத்தின் அமுதைத்
திருவீழி மிழலையூ ராளும்
கேடிலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
கெழுமுதற்(கு) எவ்விடத் தேனே. 12

திருச்சிற்றம்பலம்.

## 2. திருவாவடுதுறை

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப்
புகழாளர் ஆயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணி செய்சீர்
மிகுகா விரிக்கரை மேய
ஐயா! திருவா வடுதுறை
அமுதே! என்றுன்னை அழைத்தக்கால்
மையார் தடங்கண் மடந்தைக்(கு) ஒன்(று)
அருளா(து) ஒழிவது மாதிமையே. 1

மாதி மணங்கம ழும்பொழில்
மணிமாட மாளிகை வீதிசூழ்
சோதி மதிலணி சாந்தைமெய்ச்
சுருதி விதிவழி யோர்தொழும்
ஆதி யமரர் புராணனாம்
அணியா வடுதுறை நம்பிநின்ற
நீதி அறிகிலள் பொன்நெடும்
திண்டோள் புணர நினைக்குமே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கும்; நிரந்தரனே! என்னும்;
நிலாக்கோலச் செஞ்சடைக் கங்கைநீர்
நனைக்கும் நலங்கிளர் கொன்றைமேல்
நயம்பேசும்; நன்னுதல் நங்கைமீர்!
மனக்கின்ப வெள்ளம் மலைமகள்
மணவாள நம்பிவண் சாந்தையூர்
தனக்கின்பன் ஆவடு தண்டுறைத்
தருணேந்து சேகரன் என்னுமே. 3

தருணேந்து சேகரனே! எனும்
தடம்பொன்னித் தென்கரைச் சாந்தையூர்ப்
பொருள்நேர்ந்த சிந்தை யவர்தொழப்
புகழ்செல்வம் மல்குபொற் கோயிலுள்
அருள்நேர்ந் தமர் திரு வாவடு
துறையாண்ட ஆண்டகை யம்மானே!
தெருள்நேர்ந்த சித்தம் வலியவா
திலக நுதலி திறத்திலே. 4

திலக நுதல்உமை நங்கைக்கும்
திருவா வடுதுறை நம்பிக்கும்
குலக அடியவர்க்(கு) என்னையாட்
கொடுத்தாண்டு கொண்ட குணக்கடல்
அலதொன்(று) அறிகின்றி லேம்எனும்
அணியும்வெண் ணீ(று)அஞ் செழுத்தலால்
வலதொன் றிலள்இதற்(கு) என்செய்கேன்!
வயலந்தண் சாந்தையர் வேந்தனே! 5

வேந்தன் வளைத்தது மேருவில்
அரவுநாண் வெங்கணை செங்கண்மால்
போந்த மதிலணி முப்புரம்
பொடியாட வேதப் புரவித்தேர்
சாந்தை முதல்! அயன்சாரதி
கதியருள் என்னும்இத் தையலை
ஆந்தண் திருவா வடுதுறையான்
செய்கை யாரறி கிற்பாரே? 6

கிற்போம் எனத்தக்கன் வேள்விபுக்(கு)
எழுந்தோ டிக்கெட்ட அத்தேவர்கள்
சொற்போலும் மெய்ப்பயன் பாவிகாள்!என்
சொல்லிச் சொல்லும்இத் தூமொழி
கற்போல் மனம்கனி வித்தஎங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணால யா! வந்திடாய் என்றால்
பெற்போ! பெருந்திரு வாவடு
துறையாளி! பேசா(து) ஒழிவதே. 7

ஒழிவொன்றி லாவுண்மை வண்ணமும்
உலப்பிலள் ஊறின்ப வெள்ளமும்
ஒழிவொன்றி லாப்பொன்னித் தீர்த்தமும்
முனிகோடி கோடியா மூர்த்தியும்
அழிவொன்றி லாச்செல்வச் சாந்தையூர்
அணிஆ வடுதுறை ஆடினாள்
இழிவொன்றி லாவகை எய்திநின்(று)
இறுமாக்கும் என்னிள மானனே. 8

மானேர் கலைவளையுங் கவர்ந்துளங்
கொள்ளை கொள்ளவழக்(கு) உண்டோ?
தேனே! அமுதே!என் சித்தமே!
சிவலோக நாயகச் செல்வமே!
ஆனேஅ லம்புபுனற் பொன்னி
அணியா வடதுறை அன்பர்தம்
கோனே!நின் மெய்யடி யார்மனக்
கருத்தை முடித்திடுங் குன்றமே! 9

குன்றேந்தி கோகன தத்(து)அயன்
அறியா நெறிஎன்னைக் கூட்டினாய்
என்றேங்கி ஏங்கி அழைக்கின்றாள்
இளவல்லி எல்லை கடந்தனள்
அன்றேஅ லம்பு னற்பொன்னி
அணியா வடுதுறை ஆடினாள்
நன்றே இவள்நம் பரமல்லள்
நவலோக நாயகன் பாலளே. 10

பாலும் அமுதமும் தேனுமாய்
ஆனந்தம் தந்துள்ளே பாலிப்பான்
போலும்என் ஆருயிர்ப் போகமாம்
புரகால காமபு ராந்தகன்
சேலுங் கயலுந் திளைக்குநீர்த்
திருவா வடுதுறை வேந்தனோ(டு)
ஆலு மதற்கே முதலுமாம்
அறிந்தோம் அரிவைபொய் யாததே. 11

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. திருவிடைக்கழி

## பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

மாலுலா மனம்தந்(து) என்கையிற் சங்கம்
வவ்வினான்˙ மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தன்என் சேந்தன்
என்னும்என் மெல்லியல் இவளே. 1

இவளைவா ரிளமென் கொங்கைபீர் பொங்க
எழில்கவர்ந் தான்˙ இளங் காளை
கவளமா கரிமேல் கவரிசூழ் குடைக்கீழ்க்
கனகக்குன் றெனவருங் கள்வன்
திவளமா ளிகைசூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
குவளைமா மலர்க்கண் நங்கையானைக்கும்
குழகன்நல் அழகன்நங் கோவே. 2

கோவினைப் பவளக் குழமணக் கோலக்
குழாங்கள் சூழ்கோழிவெல் கொடியோன்
காவல்நற் சேனையென் னக்காப் பவன்என்
பொன்னை மேகலை கவர்வானே?
தேவின்நற் றலைவன் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தூவிநற் பீலி மாமயி லூரும்
சுப்பிர மண்ணியன் தானே. 3

தானமர் பொருது வானவர் சேனை
மடியச்சூர் மார்பினைத் தடிந்தோன்
மானமர் தடக்கை வள்ளல்தன் பிள்ளை
மறைநிறை சட்டறம் வளரத்
தேனமர் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
கோனமர் கூத்தன் குலவிளங் களிறென்
கொடிக்கிடர் பயப்பதுங் குணமே? 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை
    படுமிடர் குறிக்கொளா(து) அழகோ?
மணமணி மறையோர் வானவர் வையம்
    உய்யமற்(று) அடியனேன் வாழத்
திணமணி மாடத் திருவிடைக் கழியில்
    திருக்குரா நீழற்கீழ் நின்ற
கணமணி பொருநீர்க் கங்கைதன் சிறுவன்
    கணபதி பின்னிளங் கிளையே. 5

கிளையிளஞ் சேயக் கிரிதனைக் கீண்ட
    ஆண்டகை கேடில்வேற் செல்வன்
வளையிளம் பிறைச்செஞ் சடைஅரன் மதலை
    கார்நிற மால்திரு மருகன்
திளையிளம் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
    திருக்குரா நீழற்கீழ் நின்ற
முளையிளங் களி(று)என் மொய்குழற் சிறுமிக்(கு)
    அருளுங்கொல் முருகுவேள் பரிந்தே. 6

பரிந்தசெஞ் சுடரோ? பரிதியோ? மின்னோ?
    பவளத்தின் குழவியோ? பசும்பொன்
சொரிந்தசிந் தூரமோ? தூமணித் திரளோ?
    சுந்தரத்(து) அரசிது என்னத்
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
    திருக்குரா நீழற்கீழ் நின்ற
வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை அஞ்சொல்
    மையல்கொண்(டு) ஐயுறும் வகையே. 7

வகைமிகும் அசுரர் மாளவந்(து) உழிஞை
    வானமர் விளைத்ததா ளாளன்
புகைமிகும் அனலிற் புரம்பொடி படுத்த
    பொன்மலை வில்லிதன் புதல்வன்
திகைமிகு கீர்த்தித் திருவிடைக் கழியில்
    திருக்குரா நீழற்கீழ் நின்ற
தொகைமிகு நாமத் தவன்திரு வடிக்(கு)என்
    துடியிடை மடல்தொடங் கினளே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினள் மடலென்(று) அணிமுடித் தொங்கல்
புறவிதழ் ஆகிலும் அருளான்
இடங்கொளக் குறத்தி திறத்திலும் இறைவன்
மறத்தொழில் வார்த்தையும் உடையன்
திடங்கொள்வை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
மடங்கலை மலரும் பன்னிரு நயனத்(து)
அறுமுகத்(து) அமுதினை மருண்டே. 9

மருண்டுறை கோயில் மல்குநன் குன்றப்
பொழில்வளர் மகிழ்த்திருப் பிடவூர்
வெருண்டமான் விழியார்க்(கு) அருள்செயா விடுமே?
விடலையே எவர்க்கும்மெய் யன்பர்
தெருண்டவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
குருண்டபூங் குஞ்சிப் பிறைச்சடை முடிமுக்
கண்ணுடைக் கோமளக் கொழுந்தே. 10

கொழுந்திரள் வாயார் தாழ்மொழி யாகத்
தூய்மொழி அமரர்கோ மகனைச்
செழுந்திரட் சோதிச் செப்புறைச் சேந்தன்
வாய்ந்தசொல் இவைசுவா மியையே
செழுந்தடம் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
எழுங்கதிர் ஒளியை ஏத்துவார் கேட்பார்
இடர்கெடும்: மாலுலா மனமே! 11

திருச்சிற்றம்பலம்.

**சேந்தனார் அருளிய திருவிசைப்பா**
**முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ૩. கருவூர்த் தேவர்

அருளிய

# திருவிசைப்பா

## 1. கோயில்

பண் - புறநீர்மை
திருச்சிற்றம்பலம்.

கணம்விரி குடமிச் செம்மணிக் கவைநாக்
    கறையணல் கட்செவிப் பகுவாய்ப்
பணம்விரி துத்திப் பொறிகொள்வெள் ளெயிற்றுப்
    பாம்பணி பரமர்தங் கோயில்
மணம்விரி தருதே மாம்பொழில் மொழுப்பில்
    மழைதவழ் வளரிளங் கமுகந்
திணர்நிரை அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
    திருவளர் திருச்சிற்றம் பலமே. 1

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
    ஏழையேற்(கு) என்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை என்றால்
    அஞ்சல்என் றருள்செய்வான் கோயில்
கைவரும் பழனங் குழைத்தசெஞ் சாலிக்
    கடைசியர் களைதரு நீலம்
செய்வரம்(பு) அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
    திருவளர் திருச்சிற்றம்பலமே. 2

தாயின்நேர் இரங்குந் தலைவ! ஓ என்றும்
    தமியனேன் துணைவ!ஓ என்றும்
நாயினேன் இருந்து புலம்பினால் இரங்கி
    நலம்புரி பரமர்தங் கோயில்
வாயில்நேர் அரும்பு மணிமுருக்(கு) அலர
    வளரிளஞ் சோலைமாந் தளிர்செந்
தீயின்நேர் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
    திருவளர் திருச்சிற்றம்பலமே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில்

துந்துபி குழல்யாழ் மொந்தைவான் இயம்பத்
தொடர்ந்(து)இரு டியர்கணம் துதிப்ப
நந்திகை முழவம் முகிலென முழங்க
நடம்புரி பரமர்தங் கோயில்
அந்தியின் மறைநான்(கு) ஆரணம் பொதிந்த
அரும்பெறல் மறைப்பொருள் மறையோர்
சிந்தையில் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 4

கண்பனி அரும்பக் கைகள் மொட்டித்(து) என்
களைகணே: ஓலம்என்(று) ஓலிட்(டு)
என்பெலாம் உருகும் அன்பர்தம் கூட்டத்(து)
என்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன் பாடிநின் றாடப்
பனிமலர்ச் சோலைசூழ் மொழுப்பில்
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 5

நெஞ்சிடர் அகல அகம்புகுந்(து) ஒடுங்கும்
நிலைமையோ(டு) இருள்கிழித்(து) எழுந்த
வெஞ்சுடர் சுடர்வ போன்(று)ஒளி துளும்பும்
விரிசடை அடிகள்தங் கோயில்
அஞ்சுடர்ப் புரிசை ஆழிசூழ் வட்டத்(து)
அகம்படி மணிநிரை பரந்த
செஞ்சுடர் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 6

பூத்திரள் உருவஞ் செங்கதிர் விரியாப்
புந்தியில் வந்தமால் விடையோன்
தூத்திரள் பளிங்கில் தோன்றிய தோற்றம்
தோன்றநின் றவன்வளர் கோயில்
நாத்திரள் மறையோர்ந்(து) ஓமகுண் டத்து
நறு நெய்யால் மறையவர் வளர்த்த
தீத்திரள் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்த்ததிண் புவனம் முழுவதும் ஏனைத்
திசைகளோ(டு) அண்டங்கள் அனைத்தும்
போர்த்ததம் பெருமை சிறுமைபுக்(கு) ஒடுங்கும்
புணர்ப்புடை அடிகள்தங் கோயில்
ஆர்த்துவந்(து) அமரித்(து) அமரரும் பிறரும்
அலைகடல் இடுதிரைப் புனிதத்
தீர்த்தநீர் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 8

பின்னுசெஞ் சடையும் பிறைதவழ் மொழுப்பும்
பெரியதங் கருணையுங் காட்டி
அன்னைதேன் கலந்தின் னமு(து)உகந் தளித்தாங்(கு)
அருள்புரி பரமர்தங் கோயில்
புன்னைதேன் சொரியும் பொழிலகம் குடைந்து
பொறிவரி வண்டினம் பாடும்
தென்னதேன் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே 9

உம்பர்நா(டு) இம்பர் விளங்கியாங்(கு) எங்கும்
ஒளிவளர் திருமணிச் சுடர்கான்(று)
எம்பிரான் நடஞ்செய் சூழல்அங் கெல்லாம்
இருட்பிழம்(பு) அறஎறி கோயில்
வம்புலாங் கோயில் கோபுரங் கூடம்
வளர்நிலை மாடமா ளிகைகள்
செம்பொனால் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே 10

இருந்திரைத் தரளப் பரவைசூழ் அகலத்(து)
எண்ணிலங் கண்ணில்புன மாக்கள்
திருந்துயிர்ப் பருவத்(து) அறிவுறு கருவூர்த்
துறைவளர் தீந்தமிழ் மாலை
பொருந்தருங் கருணைப் பரமர்தங் கோயிற்
பொழிலகங் குடைந்துவண்(டு) உறங்கச்
செருந்திநின்(று) அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே 11

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. திருக்களந்தையாதித்தேச்சரம்

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்.

கலைகள்தம் பொருளும் அறிவுமாய் என்னைக்
  கற்பினிற் பெற்றெடுத்(து) எனக்கே
முலைகள்தந்(து) அருளுந் தாயினும் நல்ல
  முக்கணான் உறைவிடம் போலும்;
மலைகுடைந்து அனைய நெடுநிலை மாட
  மருங்கெலாம் மறையவர் முறையோத்(து)
அலைகடல் முழங்கும் அந்தணீர்க் களந்தை
  அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 1

சந்தன களபம் துதைந்தநன் மேனித்
  தவளவெண் பொடிமுழு தாடுஞ்
செந்தழல் உருவிற் பொலிந்துநோக் குடைய
  திருநுதல் அவர்க்கிடம் போலும்
இந்தன விலங்கல் எறிபுனந் தீப்பட்(டு)
  எரிவதொத்(து) எழுநிலை மாடம்
அந்தணர் அழலோம்(பு) அலைபுனற் களந்தை
  அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 2

கரியரே இடந்தான் செய்யரே ஒருபால்
  கழுத்திலோர் தனிவடஞ் சேர்த்தி
முரிவரே முனிவர் தம்மொ(டு)ஆல் நிழற்கீழ்
  முறைதெரிந்(து) ஒருடம் பினராம்
இருவரே முக்கண் நாற்பெருந் தடந்தோள்
  இறைவரே மறைகளும் தேட
அரியரே யாகில் அவரிடங் களந்தை
  அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 3

பழையராந் தொண்டர்க்(கு) எளியரே மிண்டர்க்(கு)
  அரியரே பாவியேன் செய்யும்
பிழையெலாம் பொறுத்(து)என் பிணிபொறுத் தருளாப்
  பிச்சரே நச்சரா மிளிரும்
குழையராய் வந்(து)என் குடிமுழு தாளுங்
  குழகரே ஒழுகுநீர்க் கங்கை
அழகரே யாகில் அவரிடங் களந்தை
  அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம்(பு) அதனில்
தவளமே களபம்தவளமே புரிநூல்
தவளமே முறுவல்ஆ டரவம்
துவளுமே கலையும் துகிலுமே ஒருபால்
துடியிடை இடமருங்(கு) ஒருத்தி
அவளுமே ஆகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 5

நீலமே கண்டம் பவளமே திருவாய்
நித்திலம் நிரைத்(து) இலங்கினவே
போலுமே முறவல் நிறையஆ னந்தம்
பொழியுமே திருமுகம் ஒருவர்
கோலமே அச்சோ அழகிதே என்று
குழைவரே கண்டவர் உண்ட(து)
ஆலமே ஆகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 6

திக்கடா நினைந்துநெஞ்சிடிந்(து) உருகும்
திறத்தவர் புறத்திலிருந்(து) அலச
மைக்கடா அனைய என்னையாள் விரும்பி
மற்றொரு பிறவியிற் பிறந்து
பொய்க்கடா வண்ணங் காத்தெனக்(கு) அருளே
புரியவும் வல்லவரே எல்லே
அக்கடா ஆகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 7

மெய்யரே மெய்யர்க்(கு) இடுதிரு வான
விளக்கரே எழுதுகோல் வளையாள்
மையரே வையம் பலிதிரிந்(து) உறையும்
மயானரே உளங்கலந் திருந்தும்
பொய்யரே பொய்யர்க்(கு) அடுத்தவான் பளிங்கின்
பொருள்வழி இருள்கிழித் தெழுந்த
ஐயரே யாகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம்

குமுதமே திருவாய் குவளையே களமும்
    குழையதே இருசெவி ஒருபால்
விமலமே கலையும் உடையரே சடைமேல்
    மிளிருமே பொறிவரி நாகம்
கமலமே வதனம் கமலமே நயனம்
    கனகமே திருவடி நிலைநீர்
அமலமே ஆகில் அவரிடங் களந்தை
    அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 9

நீரணங்(கு) அசும்பு கழனிசூழ் களந்தை
    நிறைபுகழ் ஆதித்தேச் சரத்து
நாரணன் பரவும் திருவடி நிலைமேல்
    நலமலி கலைபயில் கருவூர்
ஆரணம் மொழிந்த பவளவாய் சுரந்த
    அமுதமூ றியதமிழ் மாலை
ஏரணங்(கு) இருநான்(கு) இரண்டிவை வல்லோர்
    இருள்கிழித்(து) எழுந்தசிந் தையரே. 10

திருச்சிற்றம்பலம்.

### 3. திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

தளிரொளி மணிப்பூம் பதஞ்சிலம்(பு) அலம்பச்
    சடைவிரித்(து) அலையெறி கங்கைத்
தெளிரொளி மணிநீர்த் திவலைமுத்(து) அரும்பித்
    திருமுகம் மலர்ந்துசொட்(டு) அட்டக்
கிளரொளி மணிவண்(டு) அறைபொழிற் பழனம்
    கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வளரொளி மணியம் பலத்துள்நின் றாடும்
    மைந்தன் என் மனங்கலந் தானே. 1

துண்டவெண் பிறையும் படர்சடை மொழுப்பும்
    சுழியமுங் சூலமும் நீல
கண்டமுங் குழையும் பவளவாய் இதழும்
    கண்ணுதல் திலகமும் காட்டிக்
கெண்டையுங் கயலும் உகளுநீர்ப் பழனங்
    கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வண்டறை மணியம் பலத்துள்நின் றாடும்
    மைந்தன்என் மனங்கலந் தானே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநுதல் விழியும் பவளவாய் இதழும்
திலகமும் உடையவன் சடைமேல்
புரிதரு மலரின் தாதுநின்(று) ஊதப்
போய்வருந் தும்பிகாள்! இங்கே
கிரிதவழ் முகிலின் கீழ்த்தவழ் மாடம்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வருதிறல் மணியம் பலவனைக் கண்(டு)என்
மனத்தையுங் கொண்டுபோ துமினே. 3

தெள்ளுநீ றவன்நீ(று) என்னுடல் விரும்பும்;
செவியவன் அறிவுநூல் கேட்கும்;
மெள்ளவே அவன்பேர் விளம்பும்வாய்; கண்கள்
விமானமே நோக்கிவெவ் வுயிர்க்கும்;
கிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வள்ளலே! மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தனே! என்னும்என் மனனே. 4

தோழி!யாம் செய்த தொழில்என்?எம் பெருமான்
துணைமலர்ச் சேவடி காண்பான்
ஊழிதோ றூழி உணர்ந்(து)உளங் கசிந்து
நெக்குநைந்(து) உளங்கரைந்(து) உருகும்
கேழலும் புள்ளு மாகிநின் றிருவர்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வாழிய மணியம் பலவனைக் காண்பான்
மயங்கவும் மாலொழி யோமே. 5

என்செய்கோம் தோழி!தோழி! நீ துணையாய்
இரவுபோம்; பகல்வரு மாகில்
அஞ்சலோ என்னான்; ஆழியும் திரையும்
அலமரு மாறுகண்(டு) அயர்வன்;
கிஞ்சுக மணிவாய் அரிவையர் தெருவில்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மஞ்சணி மணியம் பலவ!ஓ என்று
மயங்குவன் மாலையம் பொழுதே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம்

தழைதவழ் மொழுப்பும் தவளநீற்(று) ஒளியும்
சங்கமும் சகடையின் முழக்கும்
குழைதவழ் செவியும் குளிர்சடைத் தெண்டும்
குண்டையும் குழாங்கொடு தோன்றும்
கிழைதவழ் கனகம் பொழியுநீர்ப் பழனம்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மழைதவழ் மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தர்தம் வாழ்வுபோன் றனவே. 7

தன்னக மழலைச் சிலம்பொடு சதங்கை
தமருகம் திருவடி திருநீறு
இன்னகை மழலை கங்கைகோங்(கு) இதழி
இளம்பிறை குழைவளர் இளமான்
கின்னரம் முழவம் மழலையாழ் வீணை
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மன்னவன் மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தன்என் மனத்துள்வைத் தனனே. 8

யாதுநீ நினைவ(து)? எவரையாம் உடைய(து)?
எவர்களும் யாவையுந் தானாய்ப்
பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்(து)என்
பனிமலர்க் கண்ணுள்நின் றகலான்
கேதகை நிழலைக் குருகென மருவிக்
கெண்டைகள் வெருவுகீழ்க் கோட்டூர்
மாதவன் மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தன்என் மனம்புகுந் தானே. 9

அந்திபோல் உருவும் அந்தியிற் பிறைசேர்
அழகிய சடையும்வெண் ணீறும்
சிந்தையால் நினையிற் சிந்தையுங் காணேன்;
செய்வ(து)என்? தெளிபுனல் அலங்கல்
செந்தியா வுகளுங் கெண்டைபுண் டரீகம்
கிழிக்குந்தண் பணைசெய்கீழ்க் கோட்டூர்
வந்தநாள் மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தனே அறியும்என் மனமே. 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கித்திநின் றாடும் அரிவையர் தெருவில்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மத்தனை மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தனை ஆரணம் பிதற்றும்
பித்தனேன் மொழிந்த மணிநெடு மாலை
பெரியவர்க்(கு) அகலிரு விசும்பில்
முத்தியாம் என்றே உலகர்ஏத் துவரேல்
முகமலர்ந்(து) எதிர்கொளும் திருவே. 11

திருச்சிற்றம்பலம்.

## 4. திருமுகத்தலை

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

புவனநா யகனே! அகவுயிர்க்(கு) அமுதே!
பூரணா! ஆரணம் பொழியும்
பவளவாய் மணியே! பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ! பனனகா பரணா!
அவனிஞா யிறுபோன்(று) அருள்புரிந்(து) அடியேன்
அகத்திலும் முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலும் அமர்ந்தாய்
தனியனேன் தனிமைநீங் குதற்கே. 1

புழுங்குதீ வினைகெடப் புகுந்து
புணர்பொருள் உணர்வுநூல் வகையால்
வழங்குதேன் பொழியும் பவளவாய் முக்கண்
வளரொளி மணிநெடுங் குன்றே!
முழங்குதீம் புனல்பாய்ந்(து) இளவரால் உகளும்
முகத்தலை அகத்தமர்ந்(து) அடியேன்
விழுங்குதீங் கனியாய் இனியஆ னந்த
வெள்ளமாய் உள்ளமா யினையே. 2

கன்னெகா உள்ளக் கள்வனேன் நின்கட்
கசிவிலேன்; கண்ணில்நீர் சொரியேன்;
முன்னகா ஒழியேன்; ஆயினும் செழுநீர்
முகத்தலை அகத்தமர்ந்(து) உறையும்
பன்னகா பரணா! பவளவாய் மணியே!
பாவியேன் ஆவியுள் புகுந்(து)
என்னகா ரணம்?நீ ஏழைநா யடியேற்(கு)
எளிமையோ பெருமையா வதுவே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுகத்தலை

கேடிலா மெய்ந்நூல் கெழுமியுஞ் செழுநீர்க்
கிடையனா ருடையஎன் நெஞ்சில்
பாடிலா மணியே! மணியுமிழ்ந்(து) ஒளிரும்
பரமனே! பன்னகா பரணா!
மேடெலாஞ் செந்நெற் பசுங்கதிர் விளைந்து
மிகத்திகழ் முகத்தலை மூதூர்
நீடினாய் எனினும் உட்புகுந்(து) அடியேன்
நெஞ்செலாம் நிறைந்துநின் றாயே. 4

அக்கனா அனைய செல்வமே சிந்தித்(து)
ஐவரோ(டு) என்னொடும் விளைந்த
இக்கலாம் முழுதும் ஒழியவந்(து) உள்புக்(கு)
என்னை ஆள் ஆண்டநா யகனே!
முக்கண்நா யகனே! முழுதுல(கு) இறைஞ்ச
முகத்தலை அகத்தமர்ந்(து) அடியேன்
பக்கல்ஆ னந்தம் இடையறா வண்ணம்
பண்ணினாய் பவளவாய் மொழிந்தே. 5

புனல்பட உருகி மண்டழல் வெதும்பிப்
பூம்புனல் பொதிந்(து)உயிர் அளிக்கும்
வினைபடு நிறைபோல் நிறைந்தவே தகத்(து)என்
மனம்நெ கிழ்ந்தபே ரொளியே!
முனைபடு மதில்மூன் றெரித்தநா யகனே!
முகத்தலை அகத்தமர்ந்(து) அடியேன்
வினைபடும் உடல்நீ புகுந்துநின் றமையால்
விழுமிய விமானமா யினதே. 6

விரியுநீர் ஆலக் கருமையும் சாந்தின்
வெண்மையும் செந்நிறத் தொளியும்
கரியும்நீ றாடுங் கனலுமொத் தொளிரும்
கழுத்திலோர் தனிவடங் கட்டி
முரியுமா றெல்லாம் முரிந்(து)அழ கியையாய்
முகத்தலை அகத்தமர்ந் தாயைப்
பிரியுமா(று) உளதே? பேய்களோம் செய்த
பிழைபொறுத்(து) ஆண்டபே ரொளியே! 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையுன் பாத பங்கயம் பணிவித்(து)
 என்பெலாம் உருகநீ எளிவந்(து)
உன்னையென் பால்வைத்(து) எங்கும்எஞ் ஞான்றும்
 ஒழிவற நிறைந்தஒண் சுடரே!
முன்னையென் பாசம் முழுவதும் அகல
 முகத்தலை அகத்தமர்ந்(து) எனக்கே
கன்னலும் பாலும் தேனும்ஆ ரமுதும்
 கனியுமாய் இனியையா யினையே. 8

அம்பரா! அனலா! அணிலமே! புவிநீ!
 அம்புவே! இந்துவே! இரவி!
உம்பரால் ஒன்றும் அறிவொணா அணுவாய்!
 ஒழிவற நிறைந்தஒண் சுடரே!
மொய்ம்பராய் நலஞ்சொல் மூதறி வாளர்
 முகத்தலை அகத்தமர்ந்(து) எனக்கே
எம்பிரானாகி ஆண்டநீ மீண்டே
 எந்தையும் தாயுமா யினையே. 9

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்
 முகத்தலை அகத்தமர்ந்(து) இனிய
பாலுமாய் அமுதம் பன்னகா பரணன்
 பனிமலர்த் திருவடி இணைமேல்
ஆலையம் பாகின் அனையசொற் கருவூர்
 அமுதுறழ் தீந்தமிழ் மாலை
சீலமாப் பாடும் அடியவர் எல்லாம்
 சிவபதங் குறுகிநின் றாரே. 10

திருச்சிற்றம்பலம்.

## 5. திரைலோக்கியசுந்தரம்

பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

நீரோங்கி வளர்கமல
 நீர்பொருந்தாத் தன்மையன்றே;
ஆரோங்கி முகமலர்ந்தாங்(கு)
 அருவினையேன் திறம்மறந்தின்(று)
ஊரோங்கும் பழிபாரா(து)
 உன்பாலே விழுந்தொழிந்தேன்;
சீரோங்கும் பொழிற்கோடைத்
 திரைலோக்கிய சுந்தரனே! 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நையாத மனத்தினனை
    நைவிப்பான் இத்தெருவே
ஐயா!நீ உலாப்போந்த
    அன்றுமுதல் இன்றுவரை
கையாரத்தொழு(து) அருவி
    கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ? அருள்கோடைத்
    திரைலோக்கிய சுந்தரனே? 2

அம்பளிங்கு பகலோன்பால்
    அடைப்பற்றாய் இவள்மனத்தில்
முன்பளிந்த காதலும்நின்
    முகந்தோன்ற விளங்கிற்றால்
வம்பளிந்த கனியே!என்
    மருந்தே!நல் வளர்முக்கட்
செம்பளிங்கே! பொழிற்கோடைத்
    திரைலோக்கிய சுந்தரனே! 3

மைஞ்ஞின்ற குழலாள்தன்
    மனந்தரவும் வளைதாரா(து)
இஞ்ஞின்ற கோவணவன்
    இவன்செய்த தியார்செய்தார்?
மெய்ஞ்ஞின்ற தமர்க்கெல்லாம்
    மெய்ஞ்ஞிற்கும் பண்பினுறு
செய்ஞ்ஞன்றி யிலன் கோடைத்
    திரைலோக்கிய சுந்தரனே! 4

நீவாரா(து) ஒழிந்தாலும்
    நின்பாலே விழுந்தேழை
கோவாத மணிமுத்தும்
    குவளைமலர் சொரிந்தனவால்
ஆவா!என்(று) அருள்புரியாய்
    அமரர்கணம் தொழுதேத்தும்
தேவா!தென் பொழிற்கோடைத்
    திரைலோக்கிய சுந்தரனே! 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும்நீ ஆயினும்இம்
மொய்குழலாள் மெய்ம்முழுதும்
பழுதெனவே நினைந்தோராள்
பயில்வதும்நின் ஒருநாமம்
அழுவதும்நின் திறம்நினைந்தே
அதுவன்றோ? பெறும்பேறு;
செழுமதில்சூழ் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே! 6

தன்சோதி யெழுமேனித்
தபனியப்பூஞ் சாய்க்காட்டாய்;
உன்சோதி எழில்காண்பான்
ஒலிடவும் உருக்காட்டாய்;
துஞ்சாகண் இவளுடைய
துயர்தீரு மாறுரையாய்
செஞ்சாலி வயற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே! 7

அரும்பேதைக்(கு) அருள்புரியா(து)
ஒழிந்தாய்;நின் அவிர்சடைமேல்
நிரம்பாத பிறைதூவும்
நெருப்பொடுநின் கையிலியாழ்
நரம்பாலும் உயிர்ஈர்ந்தாய்
நளிர்புரிசைக் குளிர்வனம்பா
திரம்போது சொரிகோடைத்
திரைலோக்கிய சுந்தரனே! 8

ஆறாத பேரன்பி
னவருள்ளங் குடிகொண்டு
வேறாகப் பலர்சூழ
வீற்றிருத்தி அதுகொண்டு
வீறாடி இவள்உன்னைப்
பொதுநீப்பாள் விரைந்தின்னம்
தேறாள்;தென் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே! 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிந்ததுகில் தளர்ந்தஇடை
அவிழ்ந்தகுழல் இளந்தெரிவை
இருந்தபரி(சு) ஒருநாள்கண்(டு)
இரங்காய்;எம் பெருமானே!
முரிந்தநடை மடந்தையர்தம்
முழங்கொலியும் வழங்கொலியும்
திருந்துவிழ(வு) அணிகோடைத்
திரைலோக்கிய சுந்தரனே! 10

ஆரணத்தேன் பருகிஅருந்
தமிழ்மாலை கமழவருங்
காரணத்தின் நிலைபெற்ற
கருவூரன் தமிழ்மாலை
பூரணத்தால் ஈரைந்தும்
போற்றிசைப்பார் காந்தாரம்
சீரணைத்த பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே! 11

திருச்சிற்றம்பலம்.

## 6. கங்கைகொண்ட சோழேச்சரம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

அன்னமாய் விசும்பு பறந்(து) அயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்று(ம்)நான் மறக்கேன்;
முன்னம்மா லறியா ஒருவனாம் இருவா!
முக்கணா! நாற்பெருந் தடந்தோள்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே! 1

உண்ணெகிழ்ந்(து) உடலம் நெக்குமுக் கண்ணா!
ஓலமென்(று) ஓலமிட்(டு) ஒருநாள்
மண்ணினின்(று) அலறேன்; வழிமொழி மாலை
மழலையஞ் சிலம்படி முடிமேல்
பண்ணிநின்(று) உருகேன்; பணிசெயேன் எனினும்
பாவியேன் ஆவியுள் புகுந்(து)என்
கண்ணினின்(று) அகலான்; என்கொலோ? கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே! 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே?
அன்பொடுதன்னை அஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத்(து) உள்ளம்அள் ளூறும்
தொண்டருக்(கு) எண்டிசைக் கனகம்
பற்பதக் குலையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 3

ஐயபொட் டிட்ட அழகுவா ணுதலும்
அழகிய விழியும்வெண் ணீறும்
சைவம்விட் டிட்ட சடைகளும் சடைமேல்
தரங்கமும் சதங்கையும் சிலம்பும்
மொய்கொள்எண் டிக்குங் கண்டநின் தொண்டர்
முகமலர்ந்(து) இருகணீர் அரும்பக்
கைகள்மொட் டிக்கும் என்கொலோ? கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 4

கருதிவா னவனாம்; திருநெடு மாலாம்
சுந்தர விசும்பின்இந் திரனாம்;
பருதிவா னவனாம்; படர்சடை முக்கட்
பகவனாம்; அகவுயிர்க்(கு) அமுதாம்;
எருதுவா கனனாம்; எயில்கள்மூன்(று) எரித்த
ஏறுசே வகனுமாம்; பின்னும்
கருதுவார் கருதும் உருவமாம்; கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 5

அண்டமோ ரணுவாம் பெருமைகொண்(டு) அணுவோர்
அண்டமாம் சிறுமைகொண் டடியேன்
உண்டவூண் உனக்காம் வகைஎன துள்ளம்
உள்கலந்(து) எழுபரஞ் சோதி!
கொண்டநாண் பாம்பாம் பெருவரை வில்லில்
குறுகலர் புரங்கள்மூன்(று) எரித்த
கண்டனே! நீல கண்டனே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே! 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதலைப் பட்ட கடல்வயி(று) உதித்த
முழுமணித் திரள்அமுது ஆங்கே
தாய்தலைப் பட்டங்(கு) உருகிஒன் றாய
தன்மையில் என்னைமுன் ஈன்ற
நீதலைப் பட்டா லியானும்அவ் வகையே;
நிசிசரர் இருவரோ(டு) ஒருவர்
காதலிற் பட்ட கருணையாய்!கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே! 7

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்(டு)
அத்திலங்(கு) ஒருகூ(று) உன்கண்வைத் தவருக்(கு)
அமருல(கு) அளிக்கும்நின் பெருமை
பித்தனென்(று) ஒருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே! 8

பண்ணிய தழல்காய் பாலளா நீர்போல்
பாவமுன் பறைந்துபா லனைய
புண்ணியம் பின்சென்(று) அறிவினுக்கு அறியப்
புகுந்ததோர் யோகினில் பொலிந்து
நுண்ணியைஎனினும் நம்ப!நின் பெருமை
நுன்னிடை ஒடுங்கநீ வந்(து)என்
கண்ணினுள் மணியிற் கலந்தனை கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 9

அங்கைகொண்(டு) அமரர் மலர்மழை பொழிய
அடிச்சிலம்(பு) அலம்பவந்(து) ஒருநாள்
உங்கைகொண் டடியேன் சென்னிவைத் தென்னை
உய்யக்கொண் டருளினை மருங்கில்
கொங்கைகொண்(டு) அனுங்குங் கொடியிடை காணில்
கொடியள்என்(று) அவிர்சடை முடிமேல்
கங்கைகொண் டிருந்த கடவுளே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே! 10

மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை
வளர்இளந் திங்களை முடிமேல்
கங்கையோ(டு) அணியும் கடவுளைக் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானை
அங்கையோடேந்திப் பலிதிரி கருவூர்
அறைந்தசொல் மாலையால் ஆழிச்
செங்கையோ(டு) உலகில் அரசுவீற் றிருந்து
திளைப்பதுஞ் சிவனருட் கடலே. 11

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. திருப்பூவணம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

திருவருள் புரிந்(து)ஆள் ஆண்டுகொண்(டு) இங்ஙன்
சிறியனுக்(கு) இனியது காட்டிப்
பெரிதருள் புரிந்(து) ஆனந்தமே தரும்நின்
பெருமையிற் பெரிய தொன்(று) உளதே?
மருதர சிருங்கோங்(கு) அகில்மரஞ் சாடி
வரைவளங் கவர்ந்திழி வைகைப்
பொருதிரை மருங்கோங்(கு) ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 1

பாம்பணைத் துயின்றோன் அயன்முதல் தேவர்
பன்னெடுங் காலம்நிற் காண்பான்
ஏம்பலித் திருக்க என்னுளம் புகுந்த
எளிமையை என்று(ம்)நான் மறக்கேன்
தேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத்
தெளிதரு தேறல்பாய்ந்(து) ஒழுகும்
பூம்பணைச் சோலை ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 2

கரைகடல் ஒலியில் தமருகத்(து) அரையில்
கையினிற் கட்டிய கயிற்றால்
இருதலை ஒருநா இயங்கவந்(து) ஒருநாள்
இருந்திடாய் எங்கள்கண் முகப்பே
விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல்
வேட்கையின் வீழ்ந்தபோ(து) அவிழ்ந்த
புரிசடை துகுக்கும் ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 3

கண்ணியல் மணியின் சூழல்புக்(கு) அங்கே
கலந்துபுக்(கு) ஒடுங்கினேற்(கு) அங்ஙன்
நுண்ணியை எனினும் நம்ப!நின் பெருமை
நுண்ணிமை இறந்தமை அறிவன்
மண்ணியன் மரபில் தங்கிருள் மொழுப்பின்
வண்டினம் பாடநின் றாடும்
புண்ணிய மகளிர் ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பூவனம்

கடுவினைப் பாசக் கடல்கடந்(து) ஐவர்
கள்ளரை மெள்ளவே துரந்துன
அடியினை இரண்டும் அடையுமா(று) அடைந்தேன்;
அருள்செய்வாய்; அருள்செயா தொழிவாய்;
நெடுநிலை மாடத்(து) இரவிருள் கிழிக்க
நிலைவிளக்(கு) அலகில்சா லேகம்
புடைகிடந்(து) இலங்கும் ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 5

செம்மனக் கிழவோர் அன்புதா என்றுன்
சேவடி பார்த்திருந்(து) அலச
எம்மனங் குடிகொண் டிருப்பதற் கியானார்?
என்னுடை அடிமைதான் யாதே?
அம்மனங் குளிர்நாட் பலிக்கெழுந் தருள
அரிவையர் அவிழ்குழல் கரும்
பொம்மென முரலும் ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 6

சொன்னவில் முறைநான்(கு) ஆரணம் உணராச்
சூழல்புக்(கு) ஒளித்தநீ இன்று
கன்னவில் மனத்(து)என் கணவலைப் படும்இக்
கருணையிற் பெரியதொன் றுளதே?
மின்னவில் கனக மாளிகைவா தல்
விளங்கிளம் பிறைதவழ் மாடம்
பொன்னவில் புரிசை ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 7.8.9

பூவணங் கோயில் கொண்டெனை ஆண்ட
புனிதனை வனிதைபா கனைவெண்
கோவணங் கொண்டு வெண்டலை ஏந்தும்
குழகனை அழகெலாம் நிறைந்த
தீவணன் தன்னைச் செழுமறை தெரியும்
திகழ்கரு வூரனேன் உரைத்த
பாவணத் தமிழ்கள் பத்தும்வல் லார்கள்
பரமன(து) உருவமா குவரே. 10

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. திருச்சாட்டியக்குடி

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

பெரியவா கருணை இளநிலா எறிக்கும்
பிறைதவழ் சடைமொழுப்(பு) அவிழ்ந்து
சரியுமா கழியங் குழைமிளிர்ந்(து) இருபால்
தாழ்ந்தவா காதுகள் கண்டம்
கரியவா தாமுஞ் செய்யவாய் முறுவல்
காட்டுமா சாட்டியக் குடியார்
இருகைகூம் பினகண்(டு) அலர்ந்தவா முகம்ஏழ்
இருக்கையில் இருந்தஈ சனுக்கே. 1

பாந்தள்பூ ணாரம் பரிகலம் கபாலம்
பட்டவாத தனம்எரு(து) அன்பர்
வார்ந்தகண் அருவி மஞ்சன சாலை
மலைமகள் மகிழ்பெரும் தேவி
சாந்தமும் திருநீ(று) அருமறை கீதம்
சடைமுடி சாட்டியக் குடியார்
ஏந்தெழில் இதயம் கோயில்மா ளிகைஏழ்
இருக்கையுள் இருந்தஈ சனுக்கே. 2

தொழுதுபின் செல்வ(து) அயன்முதற் கூட்டம்
தொடர்வன மறைகள்நான் கெனினும்
கழுதுறு கரிகா(டு) உறைவிடம் போர்வை
கவந்திகை கரியுரி திரிந்தூண்
தழலுமிழ் அரவங் கோவணம் பளிங்கு
செபவடம் சாட்டியக் குடியார்
இழுதுநெய் சொரிந்தோம்(பு) அழலொளி விளக்(கு)ஏழ்
இருக்கையில் இருந்த ஈசனுக்கே. 3

பதிகநான் மறைதும் புருவும்நா ரதரும்
பரிவொடு பாடுகாந் தர்ப்பர்
கதியெலாம் அரங்கம் பிணையல்மூ வுலகில்
கடியிருள் திருநடம் புரியும்
சதியிலார் கதியில் ஒலிசெயும் கையில்
தமருகம் சாட்டியக் குடியார்
இதயமாங் கமலங் கமலவர்த் தனைஏழ்
இருக்கையில் இருந்தஈ சனுக்கே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகன் முருகன் தேவியேல் உமையாள்
திருமகள் மருமகன் தாயாம்
மருமகன் மதனன் மாமனேல் இமவான்
மலையுடை அரையர்தம் பாவை
தருமலி வளனாஞ் சிவபுரன் தோழன்
தனபதி சாட்டியக் குடியார்
இருமுகங் கழல்மூன்(று) ஏழகைத் தலம்ஏழ்
இருக்கையில் இருந்தஈ சனுக்கே. 5

அனலமே! புனலே! அனிலமே! புவனி
அம்பரா! அம்பரத்(து) அளிக்கும்
கனகமே! வெள்ளிக் குன்றமே! என்றன்
களைகணே! களைகண்மற்(று) இல்லாத்
தனியனேன் உள்ளங் கோயில்கொண் டருளும்
சைவனே! சாட்டியக் குடியார்க்(கு)
இனியதீங் கனியாய் ஒழிவற நிறைந்(து)ஏழ்
இருக்கையில் இருந்தவா(று) இயம்பே. 6

செம்பொனே! பவளக் குன்றமே! நின்ற
திசைமுகன் மால்முதற் கூட்டத்து
அன்பரா னவர்கள் பருகும்ஆ ரமுதே!
அத்தனே! பித்தனே னுடைய
சம்புவே! அணுவே! தாணுவே! சிவனே!
சங்கரா! சாட்டியக் குடியார்க்(கு)
இன்பனே! எங்கும் ஒழிவற நிறைந்(து) ஏழ்
இருக்கையில் இருந்தவா(று) இயம்பே. 7

செங்கணா போற்றி; திசைமுகா போற்றி!
சிவபுர நகருள்வீற் றிருந்த
அங்கணா போற்றி! அமரனே போற்றி!
அமரர்கள் தலைவனே போற்றி!
தங்கள்நான் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கள்நா யகனே போற்றி!ஏழ் இருக்கை
இறைவனே! போற்றியே போற்றி! 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தனே! அருளாய்; செங்கணா! அருளாய;
சிவபுர நகருள்வீற் றிருந்த
அத்தனே! அருளாய்; அமரனே! அருளாய்;
அமரர்கள் அதிபனே! அருளாய்;
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழல்
சாட்டியக் குடியுள்ஏழ் இருக்கை
முத்தனே! அருளாய்; முதல்வனே! அருளாய்;
முன்னவா துயர்கெடுத்(து) எனக்கே. 9

தாட்டரும் பழனப் பைம்பொழிற் படுகர்த்
தண்டலைச் சாட்டியக் குடியார்
ஈட்டிய பொருளாய் இருக்கும்ஏழ் இருக்கை
இருந்தவன் திருவடி மலர்மேல்
காட்டிய பொருட்கலை பயில்கரு வூரன்
கழறுசொல் மாலைஈர் ஐந்தும்
மாட்டிய சிந்தை மைந்தருக்(கு) அன்றே
வளரொளி விளங்குவா னுலகே. 10

திருச்சிற்றம்பலம்.

## 9. தஞ்சை இராசராசேச்சரம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

உலகெலாம் தொழவந்(து) எழுகதிர் பருதி
ஒன்றுநூ றாயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம்(பு) அச்சோ!
அங்ஙனே அழகிதோ; அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் டிங்கள்
இலைகுலாம் பதணத்(து) இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத்(து) இவர்க்கே. 1

நெற்றியிற் கண்என் கண்ணின்நின் றகலா;
நெஞ்சினில் அஞ்சிலம்(பு) அலைக்கும்
பொற்றிரு வடிஎன் குடிமுழு தாளப்
புகுந்தன; போந்தன இல்லை;
மற்றெனக்(கு) உற(வு) என்? மறிதிரை வடவாற்
றிடுபுனல் மதகில்வாழ் முதலை
எற்றுநீர்க் கிடங்கில் இஞ்சிசூழ் தஞ்சை
இரசரா சேச்சரத் திவர்க்கே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடைகெழு மகுடம் தண்ணிலா விரிய
வெண்ணிலா விரிதரு தரளக்
குடைநிழல் விடைமேற் கொண்டுலாப் போதும்
குறிப்பெனோ? கோங்கிணர் அனைய
குடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந்(து)
உக்கசெஞ் சுடர்ப்படு குவையோங்(கு)
இடைகெழு மாடத்(து) இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 3

வாழியம் போதத்(து) அருகுபாய் விடையம்
வரிசையின் விளக்கலின் அடுத்த
சூழலம் பளிங்கின் பாசலர் ஆதிச்
சுடர்விடு மண்டலம் பொலியக்
காழகில் கமழும் மாளிகை மகளிர்
கங்குல்வாய் அங்குலி கெழும
யாழொலி சிலம்பும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 4

எவரும்மா மறைகள் எவையும்வா னவர்கள்
ஈட்டமும் தாட்டிருக் கமலத்
தவரும்மா லவனும் அறிவரும் பெருமை
அடலழல் உமிழ்தழற் பிழம்பர்
உவரிமா கடலின் ஒலிசெய்மா மறுகில்
உறுகளிற்(று) அரசின(து) ஈட்டம்
இவருமால் வரைசெய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 5

அருளுமா றருளி ஆளுமா றாள
அடிகள்தம அழகிய விழியும்
குருளும்வார் காதும் காட்டியான் பெற்ற
குயிலினை மயல்செய்வ(து) அழகோ?
தரளவான குன்றில் தணநிலா ஒளியும்
தருகுவால் பெருகுவான் தெருவில்
இருளெலாங் கிழியும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 6

தனிப்பெருந் தாமே முழுதுறப் பிறப்பின்
தளிர் இறப்(பு) இலைஉதிர்(வு) என்றால்
நினைப்பருந் தம்பாற் சேறலின் றேனும்
நெஞ்சிடிந் துருகுவ(து) என்னோ?
சுனைப்பெருங் கலங்கற் பொய்கையங் கழுநீர்ச்
சூழல்மா ளிகைசுடர் வீசும்
எனைப்பெரு மணஞ்செய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்நெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்நெடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்;
மின்னெடும் புருவத்(து) இளமையில் அனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்நடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 8

மங்குல்சூழ் போதின் ஒழிவற நிறைந்து
வஞ்சகர் நெஞ்சகத்(து) ஒளிப்பார்;
அங்கழல் சுடராம் அவர்க்கிள வேனல்
அலர்கதிர் அனையவா ழியரோ;
பொங்கெழில் திருநீ(று) அழிபொசி வனப்பில்
புனல்துளும்(பு) அவிர்சடை மொழுப்பர்;
எங்களுக்(கு) இனியர்; இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 9

தனியர்எத் தனையொ ராயிர வருமாம்
தன்மையர் என்வயத் தினராம்
கனியரத் தருதீங் கரும்பர்வெண் புரிநூற்
கட்டியர் அட்டஆர் அமிர்தர்
புனிதர்பொற் கழலர் புரிசடா மகுடர்
புண்ணியர் பொய்யிலா மெய்யர்க்(கு)
இனியர்எத் தனையும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 10

சரளமந் தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தின்
இருள்விரி மொழுப்பின் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவரை
அருமருந்(து) அருந்தி அல்லல்தீர் கருவூர்
அறைந்த சொல் மாலைஈ ரைந்தின்
பொருள்மருந்(து) உடையோர் சிவபதம் என்னும்
பொன்நெடுங் குன்றுடை யோரே. 11

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. திருவிடைமருதூர்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

வெய்யசெஞ் சோதி மண்டலம் பொலிய
வீங்கிருள் நடுநல்யா மத்தோர்
பையசெம் பாந்தள் பருமணி உமிழ்ந்து
பாவியேன் காதல்செய் காதில்
ஐயசெம் பொற்றோட் டவிர்சடை மொழுப்பின்
அழிவழ கியதிரு நீற்று
மையசெங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடம் திருவிடை மருதே. 1

இந்திர லோக முழுவதும் பணிகேட்(டு)
இணையடி தொழுதெழத் தாம்போய்
ஐந்தலை நாகம் மேகலை அரையா
அகந்தொறும் பலிதிரி அடிகள்
தந்திரி வீணை கீதமும் பாடச்
சாதிகின் னரங்கலந்(து) ஒலிப்ப
மந்திர கீதந் தீங்குழல் எங்கும்
மருவிடம் திருவிடை மருதே. 2

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன
பல்லவம் வில்லியென்(று) இங்ஙன்
வினைபடு கனகம் போலயா வையுமாய்
வீங்குல(கு) ஒழிவற நிறைந்து
துனிபடு கலவி மலைமக ளுடனாய்த்
தூங்கிருள் நடுநல்யா மத்தென்
மன்னிடை அணுகி நுணுகியுள் கலந்தோன்
மருவிடம் திருவிடை மருதே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியுமிழ் சோதி மணியினுள் கலந்தாங்(கு)
அடியனேன் உள்கலந்(து) அடியேன்
பணிமகிழ்ந் தருளும் அரிவைபா கத்தன்
படர்சடை விடம்மிடற்(று) அடிகள்
துணியுமிழ் ஆடை அரையிலோ ராடை
சுடர்உமிழ் தரஅதன் அருகே
மணியுமிழ் நாகம் அணியுமிழ்ந்(து) இமைப்ப
மருவிடம் திருவிடை மருதே. 4

பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவல்
படிவழி சென்று சென்றேறிச்
சிந்தையுந் தானும் கலந்ததோர் கலவி
தெரியினும் தெரிவுறா வண்ணம்
எந்தையுந் தாயும் யானும்என்(று) இங்ஙன்
எண்ணில்பல் லூழிகள் உடனாய்
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
மருவிடம்திருவிடை மருதே. 5

எரிதரு கரிகாட் டிடுபிணம் நிணமுண்(டு)
ஏப்பமிட்(டு) இலங்கெயிற்(று) அழல்வாய்த்
துருகழல் நெடும்பேய்க் கணம்எழுந் தாடும்
தூங்கிருள் நடுநல்யா மத்தே
அருள்புரி முறுவல் முகிழ்நிலா எறிப்ப
அந்திபோன்(று) ஒளிர்திரு மேனி
வரியரா(வு) ஆட ஆடுமெம் பெருமான்
மருவிடம் திருவிடை மருதே. 6

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பின்
இன்துளி படநனைந்(து) உருகி
அழலையாழ் புருவும் புனலொடும் கிடந்தாங்(கு)
ஆதனேன் மாதரார் கலவித்
தொழிலையாழ் நெஞ்சம் இடர்படா வண்ணம்
தூங்கிருள் நடுநல்யா மத்தோர்
மழலையாழ் சிலம்ப வந்(து)அகம் புகுந்தோன்
மருவிடம் திருவிடை மருதே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையவாம் பெற்றம் பெற்றம்ஏ(று) உடையார்
    மாதவர் காதல்வைத் தென்னை
வெய்யவாம் செந்தீப் பட்டஇட் டிகைபோல்
    விழுமியோன் முன்புபின்(பு) என்கோ
நொய்யவா றென்ன வந்துள்வீற் றிருந்த
    நூறுநூ றாயிர கோடி
மையவாங் கடைத்(து) அண்டவா னவர்கோன்
    மருவிடம் திருவிடை மருதே. 8

கலங்கலம் பொய்கைப் புனற்றெளி விடத்துக்
    கலந்தமண் ணிடைக்கிடந் தாங்கு
நலங்கலந்(து) அடியேன் சிந்தையுட் புகுந்த
    நம்பனே! வம்பனே னுடைய
புலங்கலந் தவனே! என்றுநின்(று) உருகிப்
    புலம்புவார் அலம்புகார் அருவி
மலங்கலங் கண்ணிற் கண்மணி அனையான்
    மருவிடம் திருவிடை மருதே. 9

ஒருங்கிருங் கண்ணின் எண்ணில்புன் மாக்கள்
    உறங்கிருள் நடுநல்யா மத்தோர்
கருங்கண்நின்(று) இமைக்கும் செழுஞ்சுடர்விளக்கம்
    கலந்ததெனக் கலந்துணர் கருவூர்
தருங்கரும் பனைய தீந்தமிழ் மாலை
    தடம்பொழில் மருதயாழ் உதிப்ப
வருங்கருங் கண்டத்(து) அண்டவா னவர்கோன்
    மருவிடம் திருவிடை மருதே. 10

திருச்சிற்றம்பலம்.

**கருவூர்த்தேவர் அருளிய திருவிசைப்பா முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 4. பூந்துருத்தி நம்பி காடநம்பி

அருளிய

# திருவிசைப்பா

## 1. திருவாரூர்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

கைக்குவான் முத்தின் சரிவளை பெய்து
    கழுத்திலோர் தனிவடங் கட்டி
முக்கண்நா யகராய்ப் பவனிபோந்(து) இங்ஙன்
    மூரிவதோள் முரிவுமை அளவும்
தக்கசீர்க் கங்கை அளவுமன்(று) என்னோ?
    தம்மொருப் பா(டு)உ ல கதன்மேல்
மிக்கசீ ராரூர் ஆதியாய் வீதி
    விடங்கராய் நடம்குலா வினரே. 1

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
    பருகுதோ(று) அமுதமொத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள்! இவர்தம்
    திருவுரு இருந்தவா பாரீர்;
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
    தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
    விடங்கராய் நடம்குலா வினரே. 2

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. கோயில் - முத்துவயிரமணி

## பண் - சாளரபாணி

திருச்சிற்றம்பலம்.

முத்து வயிரமணி மாணிக்க மாலைகண் மேல்
தொத்து மிளிர்வனபோல் தூண்டு விளக்கேய்ப்ப
எத்திசையும் வானவர்கள் ஏத்தும் எழில்தில்லை
அத்தனுக்கும் அம்பலமே ஆடரங்கம் ஆயிற்றே. 1

கடியார் கணம்புல்லர் கண்ணப்பர் என்றுன்
அடியார் அமருலகம் ஆளநீ ஆளாதே
முடியாமுத் தீவேள்வி மூவாயிர ரவரொடும்
குடிவாழ்க்கை கொண்டுநீ குலாவிக்கூத் தாடினையே. 2

அல்லியம் பூம்பழனத்(து) ஆமூர்நா வுக்கரசைச்
செல்ல நெறிவகுத்த சேவகனே! தென்தில்லைக்
கொல்லை விடையேறி! கூத்தா(டு) அரங்காகச்
செல்வம் நிறைந்தசிற் றம்பலமே சேர்ந்தனையே. 3

எம்பந்த வல்வினை நோய் தீர்த்திட்(டு) எமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையும்ஆட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே 4

களையா உடலொடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி! மூவா யிரவரோடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே.˙. 5

அகலோக மெல்லாம் அடியவர்கள் தற்சூழப்
புகலோக முண்டென்று புகுமிட(ம்)நீ தேடாதே
புவலோக நெறிபடைத்த புண்ணியங்கள் நண்ணியசீர்ச்
சிவலோகம் ஆவதுவுந் தில்லைச் சிற்றம்பலமே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களகமணி மாடம் சூளிகைசூழ் மாளிகைமேல்
அளகமதி நுதலார் ஆயிழையார் போற்றிசைப்ப
ஒளிகொண்ட மாமணிகள் ஓங்கிருளை ஆங்ககற்றும்
தெளிகொண்ட தில்லைச்சிற் றம்பலமே சேர்ந்தனையே. 7

பாடகமும் நூபுரமும்பல்சிலம்பும் பேர்ந்தொலிப்பச்
சூடகக்கை நல்லார் தொழுதேத்தத் தொல்லுலகில்
நாடகத்தின் கூத்தை நவிற்றுமவர் நாடோறும்
ஆடகத்தால் மேய்ந்தமைந்த அம்பலம்நின் ஆடரங்கே. 8

உருவத்(து) எரியுருவாய் ஊழிதோ றெத்தனையும்
பரவிக் கிடந்தயனும் மாலும் பணிந்தேத்த
இரவிக்கு நேராகி ஏய்ந்திலங்கு மாளிகைசூழ்ந்(து)
அரவிக்கும் அம்பலமே ஆடரங்கம் ஆயிற்றே. 9

சேடர் உறைதில்லைச் சிற்றம் பலத்தான்தன்
ஆடல் அதிசயத்தை ஆங்கறிந்து பூந்துருத்திக்
காடன் தமிழ்மாலை பத்தும் கருத்தறிந்து
பாடும் இவைவல்லார் பற்றுநிலை பற்றுவரே. 10

திருச்சிற்றம்பலம்.

**பூந்துருத்தி நம்பி காட நம்பி அருளிய திருவிசைப்பா முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 5. கண்டராதித்தர்

அருளிய

# திருவிசைப்பா

## கோயில் - மின்னாருருவம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

மின்னாருருவம் மேல்விளங்க
வெண் கொடிமா ளிகைசூழப்
பொன்னார்குன்றம் ஒன்றுவந்து
நின்றது போலுமென்னாத்
தென்னாவென்று வண்டுபாடும்
தென்தில்லை யம்பலத்துள்
என்னாரமுதை எங்கள்கோவை
என்றுகொல் எய்துவதே? 1

ஓவாமுத்தீ அஞ்சுவேள்வி
ஆறங்க நான்மறையோர்
ஆவேபடுப்பார் அந்தணாளர்
ஆகுதி வேட்டுயர்வார்
மூவாயிரவர் தங்களோடு
முன் அரங்(கு) ஏறிநின்ற
கோவே!உன்றன் கூத்துக்காணக்
கூடுவ தென்றுகொலோ? 2

முத்தீயாளர் நான்மறையர்
மூவாயிர வர்நின்னோ(டு)
ஒத்தேவாழும் தன்மையாளர்
ஓதிய நான்மறையைத்
தெத்தேயென்று வண்டுபாடும்
தென்தில்லை அம்பலத்துள்
அத்தா! உன்றன் ஆடல்காண
அணைவதும் என்றுகொலோ? 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானைப்புரையும் மடமென்நோக்கி
    மாமலை யாளோடும்
ஆனைஞ்சாடும் சென்னிமேலோர்
    அம்புலி சூடுமரன்
தேனைப்பாலைத் தில்லை மல்கு
    செம்பொனின் அம்பலத்துக்
கோனைஞானக் கொழுந்துதன்னைக்
    கூடுவது என்றுகொலோ? 4

களிவானுலகிற் கங்கைநங்கை
    காதலனே! அருளென்(று)
ஒளிமால்முன்னே வரங்கிடக்க
    உன்னடியார்க் கருளும்
தெளிவாரமுதே! தில்லைமல்கு
    செம்பொனின் அம்பலத்துள்
ஒளிவான்சுடரே! உன்னைநாயேன்
    உறுவதும் என்றுகொலோ? 5

பாரோர்முழுதும் வந்திறைஞ்சப்
    பதஞ்சலிக்(கு) ஆட்டுகந்தான்
வாரார் முலையாள் மங்கைபங்கன்
    மாமறையோர் வணங்கச்
சீரான்மல்கு தில்லைச் செம்பொன்
    அம்பலத் தாடுகின்ற
காரார்மிடற்றுளங் கண்டனாரைக்
    காண்பதும் என்றுகொலோ? 6

இலையார்கதிர்வேல் இலங்கைவேந்தன்
    இருபது தோளும்இற
மலைதானெடுத்த மற்றவற்கு
    வாளொடு நாள்கொடுத்தான்
சிலையால் புரமூன்(று) எய்தவில்லி
    செம்பொனின் அம்பலத்துக்
கலையார்மறிபொற் கையினானைக்
    காண்பதும் என்றுகொலோ? 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்கோல் வேந்தன் தென்னன்நாடும்
ஈழமுங் கொண்டதிறல்
செங்கோற்சோழன் கோழிவேந்தன்
செம்பியன் பொன்னணிந்த
அங்கோல்வளையார் பாடியாடும்
அணிதில்லை அம்பலத்துள்
எங்கோன்ஈசன் எம்மிறையை
என்றுகொல் எய்துவதே! 8

நெடியானோடு நான்முகனும்
வானவரும் நெருங்கி
முடியான்முடிகள் மோதிஉக்க
முழுமணி யின்திரளை
அடியார் அலகி னால்திரட்டும்
அணிதில்லை அம்பலத்துக்
கடியார்கொன்றை மாலையானைக்
காண்பதும் என்றுகொலோ? 9

சீரான்மல்கு தில்லைச்செம்பொன்
அம்பலத் தாடிதன்னைக்
காரார்சோலைக் கோழிவேந்தன்
தஞ்சையர் கோன்கலந்த
ஆராஇன்சொற் கண்டராதித்தன்
அருந்தமிழ் மாலைவல்லார்
பேராவுலகிற் பெருமையோடும்
பேரின்பம் எய்துவரே. 10

திருச்சிற்றம்பலம்.

**கண்டராதித்தர் அருளிய திருவிசைப்பா**
**முற்றிற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 6. வேணாட்டடிகள்

அருளிய

## திருவிசைப்பா

கோயில் - துச்சான

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்.

துச்சான செய்திடினும்
பொறுப்பரன்றே ஆளுகப்பார்;
கைச்சாலுஞ் சிறுகதலி
இலைவேம்புங் கறிகொள்வார்;
எச்சார்வும் இல்லாமை
நீயறிந்தும் எனதுபணி
நச்சாய்காண்; திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே! 1

"தம்பானை சாய்ப்பற்றார்"
என்னும் முதுசொல்லும்
எம்போல்வார்க்(கு) இல்லாமை
என்னளவே அறிந்தொழிந்தேன்
வம்பானார் பணிஉகத்தி;
வழியடியேன் தொழிலிறையும்
நம்பாய்காண்; திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே! 2

பொசியாதோ கீழ்க்கொம்பு
நிறைகுளமென் றதுபோலத்
திசைநோக்கிப் பேழ்கணித்துச்
சிவபெருமான் ஓஎனினும்
இசையானால் என்திறத்தும்
எனையுடையாள் உரையாடாள்;
நசையானேன்; திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே! 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயாத சமயங்கள்
அவரவர்கள் முன்பென்னை
நோயோடு பிணிநலிய
இருக்கின்ற அதனாலே
பேயாவித் தொழும்பனைத்தம்
பிரான்இகழும் என்பித்தாய்
நாயேனைத் திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே! 4

நின்றுநினைந்(து) இருந்துகிடந்(து)
எழுந்துதொழும் தொழும்பனேன்
ஒன்றியொரு கால்நினையா(து)
இருந்தாலும் இருக்கவொட்டாய்
கன்றுபிரி கற்றாப்போல்
கதறுவித்தி; வரவுநில்லாய்
நன்றிதுவோ? திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே! 5

படுமதமும் மிடவயிறும்
உடையகளி றுடையபிரான்!
அடியறிய உணர்த்துவதும்
அகத்தியனுக் கோத்தன்றே;
இடுவதுபுல் ஒரெருதுக்(கு)
ஒன்றினுக்கு வையிடுதல்
நடுவிதுவோ? திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே! 6

மண்ணோடு விண்ணளவும்
மனிதரொடு வானவர்க்கும்
கண்ணாவாய்; கண்ணாகா(து)
ஒழிதலும்நான் மிகக்கலங்கி
அண்ணாவோ என்றண்ணாந்(து)
அலமந்து விளித்தாலும்
நண்ணாயால்; திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே! 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடாவாய் நாப்பிதற்றி
உனைநினைந்து நெஞ்சுருகி
வீடாஞ்செய் குற்றேவல்
எற்றேமற் றிதுபொய்யில்
கூடாமே கைவந்து
குறுகுமா றியான்உன்னை
நாடாயால் திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே! 8

வாளாமால் அயன்வீழ்ந்து
காண்பரிய மாண்பிதனைத்
தோளாரக் கையாரத்
துணையாரத் தொழுதாலும்
ஆளோநீ யுடையதுவும்
அடியேன்உன் தாள்சேரும்
நாளேதோ? திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே! 9

பாவார்ந்த தமிழ்மாலை
பத்தரடித் தொண்டன்எடுத்(து)
ஓவாதே அழைக்கின்றான்
என்றருளின் நன்றுமிகத்
தேவே!தென் திருத்தில்லைக்
கூத்தாடி! நாயடியேன்
சாவாயும் நினைக்காண்டல்
இனியுனக்குத் தடுப்பரிதே. 10

திருச்சிற்றம்பலம்.

**வேணாட்டடிகள் அருளிய திருவிசைப்பா முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 7. திருவாலியமுதனார்

அருளிய

# திருவிசைப்பா

## 1. கோயில் - பாதாதீகேசம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

மையல்மாதொரு கூறன்மால்விடை
 ஏறிமான்மறி யேந்தியதடங்
கையன்கார்புரை யுங்கறைக்
 கண்டன் கனல்மழுவான்
ஐயன்ஆரழ லாடுவான் அணி
 நீர்வயல்தில்லை யம்பலத்தான்
செய்யபாதம் வந்தென்
 சிந்தையுள்ளிடங் கொண்டனவே. 1

சலம்பொற்றாமரை தாழ்ந்தெழுந்த
 தடமும்தடம்புனல் வாய்மலர்தழீஇ
அலம்பிவண் டறையும்அணி
 யார்தில்லை அம்பலவன்
புலம்பிவானவர் தானவர்புகழ்ந்
 தேத்தஆடும்பொற் கூத்தனார்கழல்
சிலம்புகிண் கிணியென்
 சிந்தையுள்ளிடங் கொண்டனவே. 2

குருண்டவார்குழற் கோதைமார்குயில்
 போன்மிழற்றிய கோலமாளிகை
திரண்ட தில்லைதன்னுள்
 திருமல்கு சிற்றம்பலவன்
மருண்டுமாமலை யான்மகள்தொழ
 ஆடுங்கூத்தன் மணிபுரைதரு
திரண்ட வான்குறங்கென்
 சிந்தையுள்ளிடங் கொண்டனவே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போழ்ந்தியானை தன்னைப்பொருப்பன்
மகளுமையச்சங் கண்டவன்
தாழ்ந்த தண்புனல்சூழ்
தடமல்கு சிற்றம்பலவன்
சூழ்ந்தபாய்ப்புலித் தோல்மிசைத்
தொடுத்துவீக்கும் பொன்நூல்தன்னினொடு
தாழ்ந்த கச்சதன்றே
தமியேனைத் தளர்வித்ததே. 4

பந்தபாச மெலாமறப்பசு
பாசம்நீக்கிய பன்முனிவரோ(டு)
அந்தணர் வணங்கும்
அணியார்தில்லை அம்பலவன்
செந்தழல்புரை மேனியுந்திகழுந்
திருவயிறும் வயிற்றினுள்
உந்திவான்சுழி என்னுள்ளத்(து)
உள்ளிடங் கொண்டனவே. 5

குதிரைமாவொடு தேர்பலகுவிந்(து)
ஈண்டுதில்லையுட் கொம்பனாரொடு
மதுரவாய் மொழியார்
மகிழ்ந்தேத்து சிற்றம்பலவன்
அதிரவார்கழல் வீசிநின்றழ
காநடம்பயில் கூத்தன்மேல்திகழ்
உதரபந்தனம் என்னுள்ளத்(து)
உள்ளிடங் கொண்டனவே. 6

படங்கொள்பாம்பணை யானொடுபிரமன்
பரம்பரமா! அருளென்று
தடங்கையால் தொழவுந்
தழலாடுசிற் றம்பலவன்
தடங்கைநான்குமத் தோள்களுந்
தடமார்பினிற் பூண்கள் மேற்றிசை
விடங்கொள் கண்டமன்றே
வினையேனை மெலிவித்ததே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யகோடுடன் கமலமலர்சூழ்தரு
    தில்லைமாமறை யோர்கள்தாந்தொழ
வைய முய்யநின்று
    மகிழ்ந்தாடு சிற்றம்பலவன்
செய்யவாயின் முறுவலும்திகழும்
    திருக்காதும்கா தினின்மாத்திரைகளோ(டு)
ஐய தோடுமன்றே
    அடியேனையாட் கொண்டனவே. 8

செற்றுவன் புரந் தீயெழச்சிலை
    கோலி ஆரழல் ஊட்டினானவன்
எற்றி மாமணிகள்
    எறிநீர்த்தில்லை அம்பலவன்
மற்றைநாட்ட மிரண்டொடு
    மலருந்திருமுக மும்முகத்தினுள்
நெற்றி நாட்டமன்றே
    நெஞ்சுளேதிளைக் கின்றனவே. 9

தொறுக்கள் வான்கம லமலருழக்கக்
    கரும்புநற் சாறுபாய்தர
மறுக்கமாய்க் கயல்கள்
    மடைபாய்தில்லை யம்பலவன்
முறுக்குவாசிகை தன்னொடுமுகிழ்த்தஅவ்
    வகத்திமொட் டொடுமத்தமும்
பிறைக்கொள் சென்னியன்றே
    பிரியாதென்னுள் நின்றனவே. 10

தூவிநீறொடு பூவவைதொழு
    தேத்துகையின ராகிமிக்கதோர்
ஆவிஉள் நிறுத்தி
    அமர்ந்தூறிய அன்பினராய்த்
தேவர் தாந்தொழ ஆடியதில்லைக்
    கூத்தனைத்திரு வாலிசொல்லிவை
மேவ வல்லவர்கள்
    விடையானடி மேவுவரே. 11

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கோயில் - பவளமால்வரை

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்.

பவளமால் வரையைப் பனிபடர்ந்
  தனையதோர் படரொளிதரு திருநீறும்
குவளைமாமலர்க் கண்ணியும் கொன்றையும்
  துன்றுபொற் குழல்திருச் சடையும்
திவளமாளிகை சூழ்தரு தில்லை
  யுள்திரு நடம்புரி கின்ற
தவள வண்ணனை நினைதொறும்
  என்மனம் தழல்மெழு(கு)ஒக் கின்றதே. 1

ஒக்க வோட்டந்த அந்தியும்
  மதியமும் அலைகடல் ஒலியோடு
நெக்கு வீழ்தரு நெஞ்சினைப்
  பாய்தலும் நிறையழிந்(து) இருப்பேனைச்
செக்கர் மாளிகை சூழ்தரு
  தில்லையுள் திருநடம் வகையாலே
பக்க மோட்டந்த மன்மதன்
  மலர்க்கணை படுந்தொறும் அலந்தேனே. 2

அலந்து போயினேன்; அம்பலக்
  கூத்தனே! அணிதில்லை நகராளீ!
சிலந்தியை "அர சாள்க" வென்(று)
  அருள்செய்த தேவதே வீசனே!
உலர்ந்தமார்க் கண்டிக் காகிஅக்
  காலனை உயிர்செகவுதைகொண்ட
மலர்ந்த பாதங்கள் வனமுலை
  மேலொற்ற வந்தருள் செய்யாயே. 3

அருள்செய்(து) ஆடுநல் லம்பலக்
  கூத்தனே! அணிதில்லை நகராளீ!
மருள்செய்(து) என்றனை வனமுலை
  பொன்பயப் பிப்பது வழக்காமோ?
திரளும் நீள்மணிக் கங்கையைத்
  திருச்சடைச் சேர்த்திஅச் செய்யாளுக்(கு)
உருவம் பாகமும் ஈந்துநல்
  லந்தியை ஒண்ணுதல் வைத்தோனே! 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்த பாதங்கள் மாலவன்
காண்கிலன்; மலரவன் முடிதேடி
எய்த்து வந்திழிந்(து) இன்னமும்
துதிக்கின்றார் எழில்மறை அவற்றாலே
செய்த்தலைக் கமலம் மலர்ந்தோங்கிய
தில்லை யம்பலத் தானைப்
பத்தியாற் சென்று கண்டிட
என்மனம் பதைபதைப் பொழியாதே. 5

தேய்ந்து மெய்வெளுத்(து) அகம்வளைந்(து)
அரவினை அஞ்சித்தான் இருந்தேயும்
காய்ந்து வந்துவந்(து) என்றனை
வலிசெய்து கதிர்நிலா எரிதூவும்;
ஆய்ந்த நான்மறை அந்தணர்
தில்லையுள் அம்பலத்(து) அரன்ஆடல்
வாய்ந்த மாமலர்ப் பாதங்கள்
காண்பதோர் மனத்தினை யுடையேற்கே. 6

உடையும் பாய்புலித் தோலும்நல்
அரவமும், உண்பதும் பலிதேர்ந்து,
விடைய(து)ஊர்வது, மேவிடங்
கொடுவரை, ஆகிலும் என்நெஞ்சம்
மடைகொள் வாளைகள் குதிகொளும்
வயல்தில்லை அம்பலத்(து) அனலாடும்
உடைய கோவினை அன்றிமற்(று)
ஆரையும் உள்ளுவ(து) அறியேனே. 7

அறிவும் மிக்கநல் நாணமும்
நிறைமையும் ஆசையும் இங்குள்ள
உறவும் பெற்றநற் றாயொடு
தந்தையும் உடன்பிறந் தவரோடும்
பிறிய விட்டுனை அடைந்தனன்
ஏன்றுகொள்; பெரும்பற்றப் புலியூரின்
மறைகள் நான்குங்கொண் டந்தணர்
ஏத்தநன் மாநடம் மகிழ்வானே! 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வான நாடுடை மைந்தனே!
    ஓஎன்பன்; "வந்தரு ளாய்" என்பன்;
பால்நெய் ஐந்துடன் ஆடிய
    படர்சடைப் பால்வண்ணனே! என்பன்;
தேன மர்பொழில் சூழ்தரு
    தில்லையுள் திருநடம் புரிகின்ற
ஏன மாமணிப் பூணணி
    மார்பனே! எனக்கருள் புரியாயே. 9

புரியும் பொன்மதில் சூழ்தரு
    தில்லையுள் பூசுரர் பலர்போற்ற
எரிய தாடும்எம் ஈசனைக்
    காதலித்(து) இளையவள் மொழியாக
வரைசெய் மாமதில் மயிலையர்,
    மன்னவன் மறைவல திருவாலி
பரவல் பத்திவை வல்லவர்
    பரமன(து) அடியிணை பணிவாரே. 10

திருச்சிற்றம்பலம்.

## 3. கோயில் - அல்லாய்ப்பகலாய்

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்.

அல்லாய்ப் பகலாய் அருவாய்
    உருவாய் ஆரா அமுதமாய்க்
கல்லால் நிழலாய் கயிலை
    மலையாய் காண அருளென்று
பல்லா யிரம்பேர் பதஞ்சலிகள்
    பரவ வெளிப் பட்டுச்
செல்வாய் மதில் தில்லைக்(கு)
    அருளித் தேவன் ஆடுமே. 1

அன்ன நடையர் அமுத
    மொழியார் அவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும் இசையும்
    கலந்த சிற்றம் பலந்தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த
    தலத்துப் புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள்
    காண விகிர்தன் ஆடுமே. 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமென் முலையார் எழில்மைந்
    தரொடும் ஏரார் அமளிமேல்
திளையும் மாடத் திருவார்
    தில்லைச் சிற்றம் பலந்தன்னுள்
வளர்பொன் மலையுள் வயிர
    மலைபோல் வலக்கை கவித்துநின்(று)
அளவில் பெருமை அமரர்
    போற்ற அழகன் ஆடுமே. 3

சந்தும் அகிலும் தழைப்பீ
    லிகளும் சாதி பலவுங்கொண்(டு)
உந்தி இழியும் நிலவின்
    கரைமேல் உயர்ந்த மதிற்றில்லைச்
சிந்திப் பரிய தெய்வப்
    பதியுட் சிற்றம் பலந்தன்னுள்
நந்தி முழவங் கொட்ட
    நட்டம் நாதன் ஆடுமே. 4

ஓமப் புகையும் அகிலின்
    புகையும் உயர்ந்து முகில்தோயத்
தீமெய்த் தொழிலார் மறையோர்
    மல்கு சிற்றம் பலந்தன்னுள்
வாமத்(து) எழிலார் எடுத்த
    பாதம் மழலைச் சிலம்(பு) ஆர்க்கத்
தீமெய்ச் சடைமேல் திங்கள்
    சூடித் தேவன் ஆடுமே. 5

குரவம் கோங்கம் குளிர்புன்னை
    கைதை குவிந்த கரைகள்மேல்
திரைவந் துலவும் தில்லை
    மல்கு சிற்றம் பலந்தன்னுள்
வரைபோல் மலிந்த மணிமண்
    டபத்து மறையோர் மகிழ்ந்தேத்த
அரவம்ஆட அனல்கை
    ஏந்தி அழகன் ஆடுமே. 6

சித்தர் தேவர் இயக்கர்
    முனிவர் தேனார் பொழில்தில்லை
அத்தா! அருளாய் அணியம்
    பலவா! என்றென் றவரேத்த
முத்தும் மணியும் நிரந்த
    தலத்துள் முளைவெண் மதிசூடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தார் சடைகள் தாழ
நட்டம் குழகன் ஆடுமே. 7

அதித்த அரக்கன் நெரிய
விரலால் அடர்த்தாய்! அருளென்று
துதித்து மறையோர் வணங்கும்
தில்லைச் சிற்றம் பலந்தன்னுள்
உதித்த போழ்தில் இரவிக்
கதிர்போல் ஒளிர்மா மணிஎங்கும்
பதித்த தலத்து பவள
மேனிப் பரமன் ஆடுமே. 8

மாலோ டயனும் அமரர்
பதியும் வந்து வணங்கிநின்(று)
ஆல கண்டா! அரனே!
அருளாய் என்றென் றவரேத்தச்
சேலா டும்வயல் தில்லை
மல்கு சிற்றம் பலந்தன்னுள்
பாலா டுமுடிச் சடைகள்
தாழப் பரமன் ஆடுமே. 9

நெடிய சமணும் அறைசாக்
கியரும் நிரம்பாப் பல்கோடிச்
செடியுந் தவத்தோர் அடையாத்
தில்லைச் சிற்றம் பலந்தன்னுள்
அடிகள் அவரை ஆரூர்
நம்பி யவர்கள் இசைபாடக்
கொடியும் விடையும் உடைய
கோலக் குழகன் ஆடுமே. 10

வானோர் பணிய மண்ணோர்
ஏத்த மன்னி நடமாடும்
தேனார் பொழில்சூழ் தில்லை
மல்கு சிற்றம் பலத்தானைத்
தூநான் மறையான் அமுத
வாலி சொன்ன தமிழ்மாலைப்
பானேர் பாடல் பத்தும்
பாடப் பாவ நாசமே. 11

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. கோயில் - கோலமலர்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

கோல மலர்நெடுங்கட்
    கொவ்வைவாய்க்கொடி ஏரிடையீர்!
பாலினை இன்னமுதைப்
    பரமாய பரஞ்சுடரைச்
சேலுக ளும்வயல்சூழ்
    தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்(து)
ஏலவுடை எம்மிறையை
    என்றுகொல் காண்பதுவே? 1

காண்பதி யான்என்றுகொல்
    கதிர்மாமணி யைக்கனலை
ஆண்பெண் அருவுருவென்(று)
    அறிதற்கரி தாயவனைச்
சேண்பணை மாளிகைசூழ்
    தில்லைமாநகர் சிற்றம்பலம்
மாண்புடை மாநடஞ்செய்
    மறையோன்மலர்ப் பாதங்களே. 2

கள்ளவிழ் தாமரைமேற்
    கண்(டு) அயனொடு மால்பணிய
ஒள்ளெரி யின்நடுவே
    உருவாய்ப்பரந் தோங்கியசீர்த்
தெள்ளிய தண்பொழில்சூழ்
    தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்
துள்ளெரி யாடுகின்ற
    ஒருவனை யுணர்வரிதே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிவையோர் கூறுகந்தான்
அழகன் எழில் மால்கரியின்
உரிவைநல் உத்தரியம்
உகந்தான்உம் பரார்தம்பிரான்
புரிபவர்க் கின்னருள்செய்
புலியூர்த்திருச் சிற்றம்பலத்(து)
எரிமகிழ்ந் தாடுகின்ற
எம்பிரான்என் இறையவனே. 4

இறைவனை என்கதியை
என்னுள்ளேஉயிர்ப் பாகிநின்ற
மறைவனை மண்ணும்விண்ணும்
மலிவான்சுட ராய்மலிந்த
சிறையணி வண்டறையுந்
தில்லைமாநகர்ச் சிற்றம்பலம்
நிறையணி யாம்இறையை
நினைத்தேன்இனிப் போக்குவனே. 5

நினைத்தேன்; இனிப்போக்குவனோ?
நிமலத்திரளை நினைப்பார்
மனத்தி னுளேயிருந்த
மணியைமணி மாணிக்கத்தைக்
கனைத்திழி யுங்கழனிக்
கனங்கதிர் ஒண்பவளம்
சினத்தொடு வந்(து)எறியுந்
தில்லைமாநகர்க் கூத்தனையே. 6

கூத்தனை வானவர்தம்
கொழுந்தைக்கொழுந் தாயெழுந்த
முத்தனை மூவுருவின்
முதலைமுத லாகிநின்ற
ஆத்தனைத் தான்படுக்கும்
அந்தணர்தில்லை அம்பலத்துள்
ஏத்தநின் றாடுகின்ற
எம்பிரானடி சேர்வன்கொலோ? 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்வன்கொலோ? அன்னைமீர்!
திகழும்மலர்ப் பாதங்களை
ஆர்வங்கொளத் தழுவி
அணிநீ(று)என் முலைக்கணியச்
சீர்வங்கம் வந்தணவுந்
தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்(து)
ஏர்வங்கை மான்மறியன்
எம்பிரான்என்பால் நேசனையே. 8

நேச முடையவர்கள்
நெஞ்சுளேயிடங் கொண்டிருந்த
காய்சின மால்விடையூர்
கண்ணுதலைக் காமருசீர்த்
தேசமிகு புகழோர்
தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்(து)
ஈசனை எவ்வுயிர்க்கும்
எம்மிறைவன் என்(று) ஏத்துவனே. 9

இறைவனை ஏத்துகின்ற
இளையாள்மொழி இன்றமிழால்
மறைவல நாவலர்கள்
மகிழ்ந்தேத்துசிற் றம்பலத்தை
அறைசெந்நெல் வான்கரும்பின்
அணியாலைகள் சூழ்மயிலை
மறைவல ஆலிசொல்லை
மகிழ்ந்தேத்துக வானெளிதே. 10

திருச்சிற்றம்பலம்.

**திருவாலியமுதனார் அருளிய திருவிசைப்பா**

**முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 8. புருடோத்தம நம்பி

அருளிய

# திருவிசைப்பா

## 1. கோயில் - வாரணி

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

வாரணி நறுமலர் வண்டு கிண்டு
பஞ்சமம் செண்பக மாலைமாலை
வாரணி வனமுலை மெலியும் வண்ணம்
வந்து வந்திவைநம்மை மயக்குமாலோ
சீரணி மணிதிகழ் மாடம் ஓங்கு
தில்லையம்பலத் தெங்கள் செல்வன்வாரான்
ஆரெனை அருள்புரிந்(து) அஞ்சல் என்பார்?
ஆவியின் பரமென்றன் ஆதரவே. 1

ஆவியின் பரம்என்றன் ஆதரவும்
அருவினை யேனைவிட்(டு) அம்ம அம்ம!
பாவிவன் மனமிது பையவேபோய்ப்
பனிமதிச் சடையான் பாலதாலோ
நீவியும் நெகிழ்ச்சியும் நிறையழிவும்
நெஞ்சமும் தஞ்சமி லாமையாலே
ஆவியின் வருததம் இதாரறிவார்?
அம்பலத்(து) அருள்நடம் ஆடுவானே! 2

அம்பலத் தருள்நடம் ஆடவேயும்
யாதுகொல் விளைவதென்(று) அஞ்சிநெஞ்சம்
உம்பர்கள் வன்பழி யாளர்முன்னே
ஊட்டினர் நஞ்சைஎன் றேயும்உய்யேன்
வன்பல படையுடைப் பூதஞ்சூழ
வானவர் கணங்களை மாற்றியாங்கே
என்பெரும் பயலைமை தீரும்வண்ணம்
எழுந்தரு ளாய்எங்கள் வீதியூடே! 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழுந்தருளாய் எங்கள் வீதியூடே
ஏதமில் முனிவரோ(டு) எழுந்தஞானக்
கொழுந்தது வாகிய கூத்தனே! நின்
குழையணி காதினில் மாத்திரையும்
செழுந்த மலர்புரை கண்கள் மூன்றும்
செங்கனி வாயும்என் சிந்தைவெளவ
அழுந்தும்என் ஆருயிர்க்(கு) என்செய்கேனோ?
அரும்புனல் அலமருஞ் சடையினானே! 4

அரும்புனல் அலமருஞ் சடையினானை
அமரர்கள் அடிபணிந்(து) அரற்ற அந்நாள்
பெரும்புரம் எரிசெய்த சிலையின்வார்த்தை
பேசவும் நையும்; என் பேதைநெஞ்சம்
கருந்தட மலர்புரை கண்ட! வண்டார்
காரிகை யார்முன்(பு)என் பெண்மைதோற்றேன்;
திருந்திய மலரடி நசையினாலே
தில்லையம் பலத்(து)எங்கள் தேவதேவ! 5

தில்லையம் பலத்தெங்கள் தேவதேவைத்
தேறிய அந்தணர் சிந்தைசெய்யும்
எல்லைய தாகிய எழில்கொள்சோதி!
என்னுயிர் காவல்கொண் டிருந்தஎந்தாய்!
பல்லையார் பசுந்தலை யோ(டு) இடறிப்
பாதமென் மலரடி நோவநீ போய்
அல்லினில் அருநடம் ஆடில்எங்கள்
ஆருயிர் காவலிங்(கு) அரிதுதானே. 6

ஆருயிர் காவலிங்(கு) அருமையாலே
அந்தணர் மதலைநின் அடிபணியக்
கூர்நுனை வேற்படைக் கூற்றஞ்சாயக்
குரைகழல் பணிகொள மலைந்ததென்றால்
ஆரினி? அமரர்கள் குறைவிலாதார்;
அவரவர் படுதுயர் களையநின்ற
சீருயி ரே!எங்கள் தில்லைவாணா!
சேயிழை யார்க்(கு)இனி வாழ்வரிதே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேயிழை யார்க்கினி வாழ்வரிது;
திருச்சிற்றம் பலத்தெங்கள் செல்வனே!நீ
தாயினும் மிகநல்லை என்றடைந்தேன்;
தனிமையை நினைகிலை; சங்கரா!உன்
பாயிரும் புலியத ளின்னுடையும்
பையமே லெடுத்தபொற் பாதமுங்கண்(டு)
ஏயிவள் இழந்தது சங்கம்ஆவா!
எங்களை ஆளுடை ஈசனேயோ. 8

எங்களை ஆளுடை ஈசனேயோ
இளமுலை முகம்நெக முயங்கிநின்பொற்
பங்கயம் புரைமுகம் நோக்கி நோக்கிப்
பனிமதி நிலவதென் மேற்படரச்
செங்கயல் புரைகண்ணி மார்கள்முன்னே
திருச்சிற்றம் பலமுட னேபுகுந்து
அங்குன பணிபல செய்துநாளும்
அருள்பெறின் அகலிடத் திருக்கலாமே. 9

அருள்பெறின் அகலிடத் திருக்கலாமென்று
அமரர்கள் தலைவனும் அயனும்மாலும்
இருவரும் அறிவுடையா ரின்மிக்கார்
ஏத்துகின் றர்இன்னம் எங்கள்கூத்தை;
மருள்படு மழலைமென் மொழியுமையாள்
கணவனை வல்வினை யாட்டியேனான்
அருள்பெற அலமரும் நெஞ்சம் ஆவா!
ஆசையை அளவறுத் தார்இங்காரே? 10

ஆசையை அளவறுத் தார்இங்காரே?
அம்பலத்(து) அருநடம் ஆடுவானை
வாசநன் மலரணி குழல்மடவார்
வைகலுங் கலந்தெழு மாலைப்பூசல்
மாசிலா மறைபல ஓதுநாவன்
வண்புரு டோத்தமன் கண்டுரைத்த
வாசக மலர்கள்கொண் டேத்தவல்லார்
மலைமகள் கணவனை அணைவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கோயில் - வானவர்கள்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

வானவர்கள் வேண்ட வளர்நஞ்சை உண்டார்தாம்
ஊனமிலா என்கை ஒளிவளைகள் கொள்வாரோ?
தேனல்வரி வண்டறையுந் தில்லைச் சிற்றம்பலவர்
நானமரோ என்னாதே நாடகமே ஆடுவரே. 1

ஆடிவருங் காரரவும் ஐம்மதியும் பைங்கொன்றை
சூடிவருமா கண்டேன் தோள்வளைகள் தோற்றாலும்
தேடியிமை யோர்பரவும் தில்லைச்சிற் றம்பலவர்
ஆடிவரும் போதருகே நிற்கவுமே ஒட்டாரே. 2

ஓட்டா வகைஅவுணர் முப்புரங்கள் ஓரம்பால்
பட்டாங்(கு) அழல்விழுங்க எய்துகந்த பண்பினார்
சிட்டார் மறையோவாத் தில்லைச்சிற் றம்பலவர்
கொட்டா நடமாடக் கோல்வளைகள் கொள்வாரே! 3

ஆரே இவைபடுவார்? ஐயங் கொளவந்து
போரேடி என்று புருவம் இடுகின்றார்
தேரார் விழவோவாத் தில்லைச்சிற் றம்பலவர்
தீராநோய் செய்வாரை ஒக்கின்றார் காணீரே. 4

காணீரே என்னுடைய கைவளைகள் கொண்டார்தாம்
சேணார் மணிமாடத் தில்லைச்சிற் றம்பலவர்
பூணார் வனமுலைமேல் பூஅம்பால் காமவேள்
ஆணாடு கின்றவா கண்டும் அருளாரே! 5

ஏயிவரே வானவர்க்கும் வானவரே என்பாரால்
தாயிவரே எல்லார்க்குந் தந்தையுமாம் என்பாரால்
தேய்மதியஞ் சூடிய தில்லைச்சிற் றம்பலவர்
வாயினைக் கேட்டறிவார் வையகத்தார் ஆவாரே. 6

ஆவா! இவர்தம் திருவடிகொண்(டு) அந்தகன்றன்
மூவா உடலவியக் கொன்றுகந்த முக்கண்ணர்
தேவா மறைபயிலுந் தில்லைச்சிற் றம்பலவர்
கோவா இனவளைகள் கொள்வாரோ? என்னையே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை வலிவாரார் என்ற இலங்கையர்கோன்
மன்னும் முடிகள் நெரித்த மணவாளர்
செந்நெல் விளைகழனித் தில்லைச்சிற் றம்பலவர்
முன்னந்தான் கண்டறிவார் ஒவ்வார்இம் முத்தரே. 8

முத்தர் முதுபகலே வந்தென்றன் இல்புகுந்து
பத்தர் பலியிடுக என்றெங்கும் பார்க்கின்றார்
சித்தர் கணம்பயிலும் தில்லைச்சிற் றம்பலவர்
கைத்தலங்கள் வீசிநின் றாடுங்கால் நோக்காரே. 9

நோக்காத தன்மையால் நோக்கிலோம் யாமென்று
மாற்பாழி ஈந்து மலரோனை நிந்தித்துச்
சேக்காத லித்தேறும் தில்லைச்சிற் றம்பலவர்
ஊர்க்கேவந்(து) என்வளைகள் கொள்வாரோ ஒண்ணுதலீர்! 10

ஒண்ணுதலி காரணமா உம்பர் தொழுதேத்தும்
கண்ணுதலான் தன்னைப் புருடோத்தமன் சொன்ன
பண்ணுதலைப் பத்தும் பயின்றாடிப் பாடினார்
எண்ணுதலைப் பட்(டு) அங்(கு) இனிதா இருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்.

**புருடோத்தம நம்பி திருவிசைப்பா**
**முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ௯. சேதிராயர்

அருளிய

# திருவிசைப்பா

## 1. கோயில் - சேலுலாம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

சேலு லாம்வயல் தில்லையுளீர்! உமைச்
சால நாள்அயன் சார்வதி னால்இவள்
வேலை யார்விடம் உண்டுகந் தீர்என்று
மால தாகும்என் வாணுதலே. 1

வாணு தற்கொடி மாலது வாய்மிக
நாணம் அற்றனள் நான்அறி யேன்இனிச்
சேணு தற்பொலி தில்லையுளீர்!உமைக்
காணில் எய்ப்பிலள் காரி கையே. 2

காரி கைக் கருளீர் கரு மால்கரி
ஈரு ரித்தெழு போர்வையி னீர்!மிகு
சீரி யல்தில்லை யாய்சிவ னே!என்று
வேரி நற்குழ லாள்இவள் விம்முமே. 3

விம்மி விம்மியே வெய்துயிர்த்(து) ஆளொ
உம்மை யேநினைந்(து) ஏத்துமொன்(று) ஆகிலள்
செம்ம லோர்பயில் தில்லையு ளீர்!எங்கள்
அம்மல் ஓதி அயர்வு றுமே. 4

அயர்வுற்(று) அஞ்சலி கூப்பி அந்தோ!எனை
உயவுன் கொன்றையந் தார்அரு ளாய்எனும்
செயலுற் றார்மதில் தில்லையு ளீர்!இவண்
மயலுற் றாள்என் றன்மா திவளே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதொர் கூறன்வண் டார்கொன்றை மார்பன்என்(று)
ஓதில் உய்வன்ஒண் பைங்கிளி யே!எனும்
சேதித் தீர்!சிரம் நான்முக னைத்தில்லை
வாதித் தீர்!என் மடக்கொடி யையே. 6

கொடியைக் கோமளச் சாதியைக் கொம்பிளம்
பிடியை என்செய்திட் டீர்!பகைத் தார்புரம்
இடியச் செஞ்சிலை கால்வளைத் தீர்!என்று
முடியும் நீர்செய்தமூச் சறவே. 7

அறவ னே!அன்று பன்றிப் பினேகிய
மறவ னே!எனை வாதைசெய் யேல்எனும்
சிறைவண் டார்பொழில் தில்லையு ளீர்!எனும்
பிறைகு லாம்நுதற் பெய்வ ளையே. 8

அன்ற ருக்கனைப் பல்லிறுத்(து) ஆனையைக்
கொன்று காலனைக் கோளிழைத் தீர்எனும்
தென்ற லார்பொழில் தில்லையு ளீர்!இவன்
ஒன்றும் ஆகிலன் உம்பொ ருட்டே. 9

ஏயு மாறெழிற் சேதிபர் கோன்தில்லை
நாய னாரை நயந்துரை செய்தன
தூய வாறுரைப் பார்துறக் கத்திடை
ஆய இன்பம் எய்தி இருப்பரே. 10

திருச்சிற்றம்பலம்.

**சேதிராயர் திருவிசைப்பா**
**முற்றிற்று.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ௯. சேந்தனார்

அருளிய

# திருப்பல்லாண்டு

## 1. கோயில் - மன்னுக

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

மன்னுக தில்லை! வளர்கநம்
பக்தர்கள்! வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே. 1

மிண்டு மனத்தவர் போமின்கள்;
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்;
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து;
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும்என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே. 2

நிட்டையி லாவுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
சீராட்டுந் திறங்களுமே சிந்தித்(து)
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
ஊறும் அமிர்தினுக்(கு) ஆலநிழற்
பட்டனுக்(கு) என்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 3

சொல்லாண் டசுரு திப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்!
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 4

புரந்தரன் மாலயன் பூசலிட்(டு)
ஓலமிட்(டு) இன்னம் புகலரிதாய்
இரந்திரந்(து) அழைப்பனஎன் னுயிராண்ட
கோவினுக் கென்செய வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பக
னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே. 5

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்குந்திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாங்குழா மாய்நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதைஎன் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமர்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 6

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன்; பெற்றதார் பெறுவாருலகில்?
ஊரும் உலகுங் கழற
உளறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே. 7

சேலுங் கயலுந் திளைக்குங்
கண்ணார்இளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்
குமென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியாநெறி
தந்துவந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்
றானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று)அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 9

தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கிவ் அண்டத்தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 10

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 11

ஆரார் வந்தார்? அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே. 12

எந்தை எந்தாய் சுற்ற(ம்)முற்றும்
எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன்சீர்
அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்.

**சேந்தனார் திருப்பல்லாண்டு முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருவிசைப்பா

## செய்யுள் முதற்குறிப்பகராதி


| பாட்டு | பக்க எண் |
|---|---|
| அகலோகமெல் | 49 |
| அக்கனா.. என் | 31 |
| அக்கனா..அழுந்தி | 14 |
| அங்கைகொண்டு | 37 |
| அணியுமிழ்சோதி | 45 |
| அண்டமோரணு | 36 |
| அதித்தஅரக்கன் | 64 |
| அதுமதியிது | 5 |
| அந்திபோல்உரு | 29 |
| அம்பரா அனலா | 32 |
| அம்பலத்தருள் | 68 |
| அம்பளிங்குபக | 33 |
| அயர்வுற்று அஞ் | 73 |
| அரிவையோர்கூ | 65 |
| அருட்டிரள்செம் | 10 |
| அரும்புனல்அல | 69 |
| அரும்பேதைக்கு | 34 |
| அருளுமாறருளி | 43 |
| அருள்செய்து | 60 |
| அருள்பெறின் | 70 |
| அலந்துபோயி | 60 |
| அல்லாய்ப்பகலா | 62 |
| அல்லியம்பூம்பழ | 49 |
| அறவனேஅன்று | 74 |
| அறிவும்மிக்க | 61 |
| அற்புதத்தெய் | 35 |
| அனலமேபுனலே | 41 |
| அன்றருக்கனைப் | 74 |
| அன்னநடையர் | 62 |
| அன்னமாய் | 35 |
| ஆசையைஅளவ | 70 |
| ஆடரவாட | 11 |
| ஆடிவருங்காரர | 71 |
| ஆயாதசமயங் | 55 |
| ஆயிரங்கமலம் | 15 |
| ஆரணத்தேன் | 35 |
| ஆருயிர்காவலிங் | 69 |
| ஆரேஇவைபடு | 71 |
| ஆவாஇவர்தம் | 71 |
| ஆவியின்பரம் | 68 |
| ஆறாதபேரன்பி | 34 |
| இடர்கெடுத் | 1 |
| இணங்கிலாஈசன் | 10 |
| இத்தெய்வநெறி | 14 |
| இந்திரலோக | 45 |
| இருந்திரைத் | 24 |
| இலையார்கதிர் | 52 |
| இவளைவாரிள | 19 |
| இவ்வரும்பிற | 22 |
| இளமென்முலைய | 63 |
| இறைவனைஏத்து | 67 |
| இறைவனைஎன் | 66 |
| உடையும்பாய் | 61 |
| உம்பர்நாடும்இம்ப | 24 |
| உயர்கொடியா | 4 |
| உருக்கி என் | 11 |
| உருவத்து எரி | 50 |
| உலகெலாம் | 42 |
| உளங்கொள | 15 |
| உள்நெகிழ்ந்து | 35 |
| உறவாகிய | 6 |
| உற்றாய் | 9 |
| எங்களை ஆளு | 70 |
| எச்சனைத்தலை | 11 |
| எட்டுரவிரவி | 10 |
| எண்ணில்பல் | 15 |
| எம்பந்தவல்வி | 49 |
| எரிதருகரிகாட் | 46 |
| எவரும்மாமறை | 43 |
| எழிலையாழ் | 46 |
| எழுந்தருளாய் | 69 |
| என்செய்கோம் | 28 |
| என்னையுன்பாத | 31 |
| என்னைவலிவா | 72 |
| ஏகநாயகனை | 13 |
| ஏயிவரேவானவ | 71 |
| ஏயமாறெழிற் | 74 |
| ஏர்கொள்கற்பக | 6 |
| ஐயபொட்டிட்ட | 60 |
| ஒக்கவோட்டந்த | 60 |
| ஒட்டாவகைஅவு | 71 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாட்டு | பக்க எண் | | | | |
|---|---|---|---|---|---|
| ஒண்ணுதலி | 72 | குருண்டவார் | 57 | தம்பானைசாய்ப் | 4 |
| ஒருங்கிருங் | 47 | குன்றேந்தி | 18 | தரவார்புனம் | 8 |
| ஒழிவொன்றி | 17 | கூத்தனைவான | 66 | தருணேந்துசே | 17 |
| ஒளிவளர் | 1 | கேடிலாமெய்ந் | 31 | தழைதவழ் | 29 |
| ஓமப்புகையும் | 63 | கைக்குவான் | 48 | தளிரொளிமணி | 27 |
| ஓவாமுத்தீ அஞ்சு | 51 | கொடியைக் | 74 | தற்பரம்பொருள் | 1 |
| கங்கைநீர் ரிசிற் | 14 | கொழுந்திரள் | 21 | கனதன்நற் | 2 |
| கடியார்கணம்பு | 49 | கோலமலர் நெடு | 65 | தனிபெரும் | 43 |
| கடுப்பாய்ப் | 8 | கோலமேமேலை | 2 | தனியார்எத்த | 44 |
| கடுவினைப்பாசக் | 39 | கோவினைப்பவ | 19 | தன்சோதியெழு | 34 |
| கணம்விரிகுடுமி | 22 | சடைகெழுமகு | 43 | தன்னகமழலை | 29 |
| கணியெரி | 5 | சந்தனகளபம் | 25 | தன்னடிநிழற் | 14 |
| கண்ணியல் | 38 | சந்தும் அகிலும் | 63 | தாட்டரும்பழ | 42 |
| கண்பனிஅரும் | 23 | சரளம்மந்தார | 44 | தாயின்நேர்இரங் | 23 |
| கரியரே | 25 | சரிந்ததுகில் | 34 | தானமற்பொருது | 19 |
| கருவளர்மேகத் | 4 | சலம்பொற்றாமை | 57 | திக்கடாநினைந் | 28 |
| கரைகடல்ஒலி | 38 | சித்தர்தேவர் | 63 | திரைக்குமிக்கு | 11 |
| கலங்கலம்பொய் | 47 | சித்தனேய | 41 | திருநீறிடாவுருத் | 8 |
| கலைகள்தம்பொரு | 25 | சிறப்புடைய | 12 | திருநுதல்விழியும் | 28 |
| களகமணிமாடம் | 50 | சீரானமல்கு | 53 | திருநெடுமால்புரிந்து | 38 |
| களிவானுலகிற் | 52 | சீர்த்தின்புவ | 24 | திருமகன்முருகன் | 41 |
| களையவுலவோ | 49 | சுரதிவானவ | 36 | திருவருள்புரிந்து | 38 |
| கள்ளவிழ்தாம | 65 | செக்கர்ஒத்து | 11 | திலகநுதல்உமை | 17 |
| கற்றவர்விழுங்கு | 13 | செங்கணா | 41 | தில்லையம்பலத் | 69 |
| கன்னெகா | 30 | செம்பொனே | 41 | திறம்பியபிறவி | 3 |
| காடாடுபலகண | 7 | செம்மணக் | 39 | துச்சானசெய்தி | 54 |
| காணீரேஎன்னு | 71 | செய்யகோடு | 59 | துணுக்கென | 10 |
| காண்பதியான | 65 | செழுந்தென் | 7 | துண்டவெண்பி | 27 |
| காமனைக்காலன் | 6 | செற்றுவன் | 59 | துந்துவிகுழல் | 23 |
| காரிகைக்கருளீர் | 73 | சேடர்உறை | 50 | தூவிநீரொடு | 59 |
| கானேவரும் | 7 | சேயிழையா | 70 | தெள்ளுநீறவ | 28 |
| கித்திநின்றாடும் | 29 | சேர்வன்கொ | 66 | தேய்ந்துமெய் | 61 |
| கிளையிளஞ்சே | 20 | சேலுலாம்வ | 73 | தேர்மலிவிழவிற் | 4 |
| கிற்போம்எனத் | 17 | சேவேந்து | 8 | தொடங்கினள் | 20 |
| குணமணிக்குரு | 20 | சொன்னவில் | 39 | தொழுதுபின் | 40 |
| குதிரைமாவொடு | 58 | தக்கன்நற்ற | 3 | தொறுக்கள்வா | 59 |
| குமுதமேதிரு | 27 | தக்கன்வெங் | 15 | தோழியாம் | 28 |
| குரவம்கோங்க | 63 | தந்தையங்க | 57 | நிறைந்தழைவா | 5 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு பக்க எண்


| பாட்டு | பக்க எண் |
|---|---|
| நினைக்கும்நிரந் | 16 |
| நினைத்தேன் | 66 |
| நின்றுநினைந்து | 55 |
| நீரணங்கு அசும்பு | 27 |
| நீரோங்கிவளர் | 32 |
| நீலமேகண்டம் | 26 |
| நீவாராதுஒழி | 33 |
| நீறணிபவளக் | 2 |
| நெஞ்சிடர்அகல | 23 |
| நெடியசமனும் | 64 |
| நெடியானொடு | 53 |
| நெற்றியிற்கண் | 42 |
| நேசமுடையவர் | 67 |
| நையாதமனத் | 33 |
| நோக்கததன் | 72 |
| படங்கொள் | 58 |
| படுபதமும் | 55 |
| பண்ணியதழல் | 37 |
| பதிகநான்மறை | 40 |
| பத்தியாய்உணர் | 48 |
| பந்தபாச | 58 |
| பந்தமும் பிரிவும் | 46 |
| பரிந்தசெஞ்சுட | 20 |
| பவளமால் வரை | 60 |
| பவளமேமகுட | 26 |
| பழையராத | 25 |
| பனிபடுமதியம் | 45 |
| பன்நெடுங்காலம் | 44 |
| பாடகமும்நூபு | 50 |
| பாடலங்காரப் | 15 |
| பாந்தாள் பூணாரம் | 40 |
| பாம்பணைத்துயி | 38 |
| பாரோர்முழுதும் | 52 |
| பாலும்அமுதமும் | 18 |
| பாவார்த | 56 |
| பின்னுசெஞ்ச | 24 |
| புரியும்பொன் | 62 |
| புவனநாயகானே | 30 |
| புழுங்குதீவி | 30 |
| புனல்படஉரு | 31 |
| பூத்திரள் | 23 |
| பூவணங்கோ | 39 |
| பெரியவாகரு | 20 |
| பெருமையிற் | 2 |
| பொசியா | 54 |
| பொய்யாத | 16 |
| பொருவரைப் | 5 |
| போழ்ந்தியா | 58 |
| மங்குல்சூழ் | 41 |
| மங்கையோ | 37 |
| மடங்கலாய் | 3 |
| மண்டலத் | 13 |
| மண்ணோடு | 55 |
| மருண்டுறை | 21 |
| மறைகளும் | 3 |
| மாதிமணங்க | 16 |
| மாதொர்கூ | 74 |
| மாலுலாமனம் | 19 |
| மாலோடயனு | 64 |
| மானேர்கலை | 18 |
| மாளைப்பு | 52 |
| மின்னாருரு | 51 |
| முத்தர்முது | 72 |
| முத்தீயாளர் | 51 |
| முத்துவயிர | 49 |
| முழுவதும்நீ | 33 |
| மூலமாய்முடி | 32 |
| மெய்யரே | 26 |
| மைஞ்ஞின்ற | 33 |
| மையல்மா | 57 |
| மோதலைப்ப | 36 |
| யாதுநீநி | 29 |
| வகைமிகும் | 20 |
| வண்டார்கு | 8 |
| வரம்பிரிவா | 4 |
| வாடாவாய் | 56 |
| வாணுதற்கொடி | 73 |
| வாரணிநறுமலர் | 68 |
| வாழியம்போதத் | 43 |
| வாளாமால் | 50 |
| வானநாடுடை | 61 |
| வானவர்கள் | 71 |
| வானோர்பணிய | 64 |
| விண்ணவர்மகு | 12 |
| விம்மிவிம்மியே | 73 |
| விரியுநீர் | 31 |
| வெங்கோல்வேந் | 52 |
| வெய்யசெஞ்சோ | 45 |
| வெறியேறு | 7 |
| வேந்தன்வளைத்த | 17 |
| வேறாகஉள்ளத்து | 9 |
| வைத்தபாதங் | 61 |
| வையவாம்பெற்ற | 46 |


திருப்பல்லாண்டு


| | |
|---|---|
| ஆரார்வந்தார் | 77 |
| எந்தையெந்தா | 77 |
| குழலொலி | 77 |
| சீரந்திருவும் | 76 |
| சேலுங்கயலும் | 76 |
| சேவிக்கவந் | 76 |
| சொல்லாண்ட | 75 |
| தாதையைத்தா | 77 |
| நிட்டையிலா | 75 |
| பாலுக்குபாலகன் | 77 |
| புருந்தரன்மால | 76 |
| மன்னுகதில்லை | 75 |
| மிண்டுமனத்த | 75 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ மாருதி, வழக்கம்பரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org